போன் நெ· 15. விலை 2 அணா. REGD NO. 4642

திராவிடநாடு

மலர் 12 | 6—12—53 | இதழ் 23

விடிவெள்ளி முளைக்கையிலே...!

[அண்ணல்]

கடும்பனி! தாங்கமுடியாத குளிர்! கதிரோன் எழாத நேரம்; காரிருள் விலகவில்லை; காலை, மணி மூன்று. அப்போது, ஆயிரக்கணக்கான தோழர்கள், கைகளிலே கழகக் கொடிகளை ஏந்தியவண்ணம், கழக ஒலிகளை முழக்கியபடி, 'சென்னைச் சிறைக் கதவு எப்போது திறக்கும்?' என்று எதிர்பார்த்தபடி நின்ற காட்சியை என்னென்பேன்!

சிறையில் அடைபட்டுக் கிடக்கும் பொதுச் செயலாளரும், முன்னணி வீரர்களும், விடிவதற்குள் விடுதலை செய்யப்படப்போகிறார்கள்—யாருமறியாமல் விடுவிக்கத் திட்டமிட்டிருக்கிறார்கள், சர்க்கார்—எனும் செய்தியை எப்படியோ அறிந்து, நகரின் நாலு பக்கங்களிலிருந்தும் கால்நடையாகவே வந்திருந்த கழகக் காளையர் கூடிக் கிடந்தனர்.

அவர்கள் உள்ளத்தின் ஒலி, சிறைக் கதவுகளை மோதியது! ஆர்வத்தை, 'அடக்குமுறை ஒழிக!' எனும் முழக்கம் வெளிப்படுத்தியது! விடிவெள்ளி முளைக்கும் நேரத்தில், வீரங்கொள் கூட்டத்தின் வெற்றித் தூதர்களான கழகக் காளையர், சென்னைச் சிறைக்குமுன்னே கூடுவானேன்? குமுறல் குரல் எழுப்புவானேன்?—என, ஒரு நிமிடம் எண்ணினேன். என் இதயத்தில்; நான்காண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற சம்பவங்களும், இந்த நான்காண்டுக் காலத்தில நாட்டில் உலவ, நாம் பட்ட கஷ்ட நஷ்டங்களும், ஊர்ந்தோடின.

அப்பப்பா! சாதாரணமான பாதையிலா, நாம் நடந்துவந்திருக்கிறோம். கள்ளிக்காடு, முட்புதர், காட்டு விலங்கிலும் கொடிய ஆட்சியினர், 'கண்டதே காட்சி – கொண்டதே கோலம்' எனும் கருத்தினர், கழுகுக் கூட்டம், புலி மனம் கொண்

டோர், பத்திரிகைப் பாம்புகள், பணக்குண்டு— இத்தனையையும் தாண்டி, நாம் நடந்துவந்துள்ளோம். மலர் தூவிய பஞ்சு மெத்தையல்ல, நமது பாதை! மஜீது எனும் மாவீரனும், பாண்டியன் எனும் பைந்தமிழ் மகனும், பலியாகியிருக்கிறார்கள்—ஆறுபேர், பிணமாகியிருக்கிறார்கள்—கரங்களை இழந்தோரும், கால்களை இழந்தோரும் — ஏராளம். சிறைக்குள்ளே பூட்டப்பட்டுச் சித்ரவதைக்காளான தோழர்கள் தொகை ஆயிரமாயிரம்.

இவ்வளவு இன்னல்களையும், கன்னல் சாறுபோலக் கழகம் கருதியபடியே தன்னுடைய காரியங்களைச் செய்துவருவதன் எடுத்துக்காட்டா—இது? அதனால்தானா, அடிக்கும் பனியையும், நடுங்கும் உடலையும் பொருட்படுத்தாது, இங்கே, இந்த நேரத்தில், கூடிக் குமுறல் குரல் எழுப்புகிறார்கள்! — என எண்ணினேன் 'ஆ!' என்றது, உள்ளம்.

அடக்குமுறைகள் பாயப் பாய, கொள்கைகளை உரமாகக்கொண்ட கட்சிகள் வளருமா—படித்ததுண்டு, நாம் — பார்த்ததுமுண்டு. ஆனால், இந்தப் பால பாடத்தை, நாம் அறியும் வாய்ப்பு, சடந்த ஆறு மாதத்துக்கு முன்னர்தான் கிடைத்தது.

தி. மு. க. என்றால். அலட்சியத்தையும் ஆண்டவனின் லீலா விநோதத்தையும் துணைக்கழைத்து கேலிச் சிரிப்பையும், கிண்டல் கணைகளையும் பூட்டிய ஆச்சாரியார், 'ஐயோ! அப்படியா?' என்றலறி, 'ஆகா! விடப்போவதில்லை' என்று கூவி, துப்பாக்கிக் குண்டுகளையும், சட்ட சங்கிலிகளையும் துணைக்கழைத்தார் — இஷ்டப்போல் ஆடினார் — கழகத்தின் சுடர்களையெல்லாம் காராக்கிருகத்துக்குள் தள்ளினார். ஆனால், கழகம், இருண்டா விட்டது? இல்லை! இல்லை!! ஒளி

விடும் வைரத்துக்கு நெருங்கிட நெருங்கிட, அதன் பிரகாசம் பன்மடங்கு அதிகம் ஆவதைப்போல், தன்னைத் தாக்கிய அடக்குமுறைகளால், கழகம், முன்னிலும் வலிவாக—பொலிவாக—காட்சி தருகிறது!

தன்னுடைய தொண்டர்களை, தன்னைக் கட்டிக் காக்கும் தோழர்களை, கழகம் கவுரவிக்கத் தவறவில்லை — அதனைத் தன்னுடைய கடமையெனக் கருதுகிறது. அதனால்தான், அந்த நேரத்திலும், பக்கத்தில் ஓடும் கூவம் ஆற்றின் நாற்றத்தையும், அதனருகிலிருக்கும் அரசாங்கத்தின் நாற்றத்தையும் நினைத்தபடி, அங்கே, ஆயிரக்கணக்கான தோழர்கள், கூடிக்கிடந்தனர்.

அவர்கள், விழிகளிலே, ஒரு ஆர்வம்! மொழிகளிலே ஒரு புத்தெழுச்சி! வில்லிலிருந்து கிளம்பிய அம்புகளைப் போல, ஆர்வக் குன்றுகளாக, அவர்கள் காட்சி தந்தனர். இந்தக் காட்சியினை, ஆளவந்தாரும் —குறிப்பாக ஆச்சாரியாரும்— கண்டிருக்க வேண்டும். அப்போதுதான் புரியும், இது எந்தக் கழகம் என்பதும், எதனால் இந்தப்பலம் பெற்றதென்பதும்!

கழகத்தின் முன்னணி வீரர்களாக நாள்தோறும் சங்கநாதம் எழுப்பும் காளைகளிருக்கிறார்களே, அவர்கள் என்ன, மிட்டாமிராசுகளா!—வடபாதியா, செட்டி நாடா —'இந்து' பெற்றிருப்போரா, 'மித்திரன்' துணைகொண்டவரா—இல்லை! இல்லை!! எனினும், அவர்களைக் காண வேண்டுமெனும் ஆவல், கழகக் காளையருக்கேன் ஏற்பட வேண்டும்?

சென்னைச் சிறைக் கதவு திறக்கப்படுவதற்கு முதல் நாள் எழும்பூர் ரயில் நிலையத்திலே கல்லக்குடி அறப்போர்க் குழுத்தலைவர், கருணாநிதி வரவேற்கப்பட்டார்—அருமையான ஊர்வலம் ஒன்று நடைபெற்றது. ஆகா. எனை ஆர்வம்! எவ்வளவு அன்பு!! சென்னையே, திரண்டிருந்தது போல, காட்சி தந்தனவே, வீதிகள். கழகக் காளையெல்லாம், ஆவல் பிம்பங்களாக, நடமாடினரே — ஏன்? அந்தளவுக்கு, இந்த ஆட்சியின் அடக்குமுறையில் அதிருப்தி கொண்டிருக்கிறார்கள்—ஆகவே, தமக்குப் பிடிக்காத ஆட்சியை அகற்றும் அறப்போரிலீடுபடுவோரை வாழ்த்த வருகிறார்கள்—அப்படி அறப்போரிலீடுபட்டோரை, தம்முடைய அதிருப்திக்காளான ஆட்சி, தண்டிக்கும் தாறுமாறுகள் செய்தும் கொடுமைகள்

இழைத்தால், குமுறுகிறார்கள். இந்தக் குமுறல், இலேசானதா? ஒன்று அல்லது இரண்டு உள்ளங்களிலிருந்து, ஏற்படுகிற குமுறலா. இது? இலட்சக்கணக்கான இதயங்களிலிருந்து எழும்புகிறது-அதனால்தான், கடுங்குளிரானாலும், குளிர் காற்றானாலும், நள்ளிரவானாலும், நலிவும் துயரும் கிடைக்குமென்றாலும், அவைகளை அலட்சியப் படுத்தியவாறு, தமது தோழர்களைக் காணவும்—வாழ்த்தவும் கூடுகிறார்கள், மக்கள்.

அப்படிக் கூடும்போது, அவர்களைக் காணும், கழகத் தொண்டர்கள், தமது பணி காய்த்துப் பழுக்கிறது எனும் ஆனந்தத்தை, அடைய முடியாமலிருக்கமுடியுமா? அதனையே, நான் பெற்றேன்!

பாலத்தின் மீதும் — மரக்கிளைகளிலும்—எங்கெங்கு இடமிருக்கிறதோ, அங்கெல்லாம் நின்றபடி — சென்னைச் சிறைக்கு முன்னே கூடிக்கிடந்த கழகக்காளையரும், மக்கள் வெள்ளமும், சிறைக் கதவுகளையே பார்த்தபடி நின்றுகொண்டிருந்தனர். அவர்கள், வீட்டிலே பனாங் குளிக்கும் சீமான்கள் அல்ல! ஆலையின் சங்கு ஊதியதும், ஓட வேண்டியவர்கள் உல்லாசமாக வாழ்க்கையை நடத்தும் உயரப்பர்களல்ல—உழைத்து வாழ வேண்டிய, கூட்டம். ஓய்வில்லாத, கூட்டம். அது, இரவெல்லாம் விழித்திருந்து, காலை மலருமுன் கர்ஜனைகள் எழுப்பி, கண்மூடாது காத்துக்கிடந்தது, சிறைவாயிலின் முன்! மணி நான்கு ஆயிற்று—ஐந்

தூத்துக்குடித் தோழர்கள் சிறையில் கிடக்கிறார்கள்!

★

நான்கு மாதங்களாகிவிட்டன!!

நம்மோடு அவர்கள் உலவுவது எந்நாள்?

நம்மருந் தோழர்களை, விடுவிக்க வேண்டாமா?

தோழர்காள்!
உங்கள் பங்கைச் செய்தீர்களா?

முகவரி:— அ. பொன்னம்பலனார்,
'அறிவகம்'
ராயபுரம்—சென்னை.

தும் ஆயிற்று—கூட்டமும், ஆயிரக் கணக்கில் அதிகமாயிற்று. ஆறு, மணி, அடித்தது! சிறைக் கதவும், திறந்தது!!

கதிரோனைக் காணும், உழைப்பாளர் கூட்டம், காரிருளில் பட்ட அவதியை யெண்ணிப் பெருமூச்சும், ஒலி கிளம்பிவிட்டதெனும் உவகையும் பெறுமே, அதைப் போல பெருமூச்சும் ஆனந்தமும் கலக்க, 'வாழ்க! வாழ்க!!' என்று வாழ்த்தினர். முதலில், பொதுச் செயலாளர், வந்தார்! மூன்று மாதங்கள், கழித்து, இன்றுதான், அவர் வெளியே வருகிறார் — தாயகத்தைக் காண்கிறார். அவரைத் தொடர்ந்து கழகக்கண்மணிகளாம் தோழர்கள் நெடுஞ்செழியன், சம்பத், நடராசன் ஆகியோர், வந்தனர் அவர்களைக் கண்டதும், ஆகா! எத்தகைய ஆர்வம் மலர்ந்தது, மக்களிடம். எவ்வளவு, ஆனந்தம், ஏற்பட்டது.

இது, சாதாரணமானதா? பிரிந்த அண்ணனைச் சந்திக்கும்போதும், காணாத மகனைக் காணும் தாயும், நெடுநாட்களுக்குப் பின்னர் கணவனைக் காணும் காதலியும், வெளிநாடு சென்று மீண்ட உறவினரைக் காணும் சுற்றத்தாரும், பேரானந்தமும் பெருமகிழ்ச்சியும் கொள்வது இயற்கை—குடும்பத்துக்குள் நடக்கும், சம்பவம்.

ஆனால், சிறைக்குச் சென்று திரும்பும் நமது தோழர்களைக் காணும்போது, நாட்டிலிருப்போருக்கேன், பேரானந்தமும் பெருமகிழ்ச்சியும் ஏற்படவேண்டும்? அண்ணனையும் தம்பியையும், ஆருயிர்க்குயிரான சுற்றத்தாரையும் சந்திப்பது போன்ற, ஆவலேன் உருவாகவேண்டும்?

சில மாதங்கள், பிரிவு! ஆனால், இந்தப் பிரிவினையும் சகிக்கமுடியாத அளவில், மக்கள் மன்றத்தில், எப்படி வளர்ந்தது, இந்தப் பாசம்? இல்லையென்றால் அன்று மாலை, சென்னைக் கடற்கரையில் அத்தனை லட்சம் மக்கள் கூடியிருப்பார்களா! பாசமுள்ள தோழர்கள், நேசமுள்ள மக்கள், அன்றேன், அப்படிக் கூடினர்?

காட்டுக்குள், வனவிலங்குகளுக்கு மத்தியில், காரிருள் ஒருபக்கம் இடிக்க, மலைப் பாம்புகள் மரக்கிளைகளிலிருந்தபடி ஒருபக்கம் தொங்க, ஆந்தையும் கோட்டானும் அலற, அகற்கு மத்தியில் அகப்பட்டுக் கொண்டவன — விடிந்துவிட்டது, விடிந்த காலையோடு தன்னை மீட்க வீரர்களும் வந்துவிட்டார்கள்—என்பதைக் கண்டால் என்ன ஆனந்தம் அடைவானோ, அதைத்தான், அங்கே கண்டேன். இல்லையேனில், இவ்வளவு இலட்சம, மக்கள் ஏன் கூடவேண்டும்? இன்றிருக்கும் ஆட்சியின் கோரநகங்களில் சிக்கித்திடக்கும் தாயக மக்கள், தங்களை மீட்போர் யார், நல்வாழ்வு வழங்குவோர் யார்—அதற்கு அவர்கள் என்ன வழிகாட்டப்போகிறார்கள் — என்றெல்லாம், எதிர்பார்க்கிறார்கள்.

இவ்விதம், ஒரு காலத்தில், இதே



மக்கள் மன்றம், காங்கிரஸ் கட்சியை எதிர்பார்த்தது! இன்றோ, ஏமாந்தோம், இனி வேறுபாதைதான் வேண்டும் — என எண்ணுவதால், புதிய பாதை புகுகின்றனர்! அந்தப் பாதையே, திராவிட முன்னேற்றக் கழகம், என்று கருதுகின்றனர். தி. மு. க-வின் கொள்கைகள்மீது, அதனைப் பரப்பும் தோழர்கள்மீதும் மக்கள் மன்றத்துக்கோர், நம்பிக்கை உதயமாகிவிட்டது.

இந்த நம்பிக்கைக் கோட்டை முன், பீரங்கியும குண்டும், துப்பாக்கிப் படையும் சட்டச், சங்கிலியும், என்ன செய்ய முடியும்? இழிவும் பழியும் தாங்கி, இனத்தவனை ஏமாற்றுபவன் அடிக்க, அந்த அடிகளைத் தாங்கியபடி செக்குமாடு போலுழைத்து, அழவும் நேரமின்றி விழியில் வழியவேண்டிய நீரை வியர்வைகளாக உடம்பின் ஒவ்வொரு அணுக்கள் வழியாகவும் சிந்தி, உலர்ந்த சருகுகளாய், காய்ந்த கூடுகளாய், உலவிய மக்கள் கூட்டத்தின் நம்பிக்கைக் கோட்டையை எட்டிப் பிடிப்பது, எளிதா? அல்ல! அல்ல!! மக்கள் மன்றம் மெழுகுப்பொம்மைகளல்ல—இஷ்டப்படி வளைக்கவும், நிமிர்க்கவும். அதிலும் காங்கிரஸ் ஆட்சியால் வாதைப்பட்டு மெலியும் ஏழைகள் மன்றம், இனி, ஏமாறாது. 'நாளை பலாக்களை தருகிறேன்! இன்றிருந்த களாக்காயை வைத்துக் கொள்!' என்று இச்சகமொழிகள் பேசி, அவர்களிடம் சென்றிட முடியாது! மனிதன், அடிக்கடி ஏமாறமாட்டான். அதைப்போலத்தான், மக்கள் மன்றமும் — அந்த மன்றத்தில், நம்பிக்கை நட்சத்திரமாகக் காட்சி அளிக்கிறது, திராவிட முன்னேற்றக் கழகம். இது, எளிதான பேறு! எண்ணியமாத்திரத்தில், பெறக்கூடியதா!! மக்கள் மன்றத்தின், நம்பிக்கையைப்பெற, கண்ணீரும் செந்நீரும் சிந்திய கட்சிகள், அநேகம் காரும், கனவான்களும் இருந்தால் போதும்—அதுவே மக்கள் மன்றம் என்று காட்டிக் கொண்ட கட்சிகளும் உண்டு. இந்த ஏமாற்றுக் கட்சிகளின் கூடாரமாக, இன்று காங்கிரஸ் காட்சியளிக்கிறது! கண்ணீரும் செந்நீரும் சிந்திடும் கட்சியாக, நாம் காட்சி அளிக்கிறோம்!! இவ்வண்ணம் ஏழைகளின் கூடாரங்களாக இருக்கும் இயக்கங்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். மக்களை மரப்பொம்மைகளென எண்ணி, வஞ்சகத்தால் மயக்கி, மயங்கினோரை ஏணிப்படிகளாக்கி, எத்தர்களாகிவிட்ட அரசியல் போதையும்—ஆத்திரப் போர்வையும் தாங்கி — இன்று அடாப்பிடிகளில், கவனத்தைச் செலுத்துகிறது. அதன் தலைவர்களோ, ஆச்சாரியாராகவும் பண்டிதராகவும் இருக்கிறார்கள். ஒருவர், சாஸ்திரம்—வேதம்—சம்பிரதாயம்—கடவுள் செயல்!—எனும் போர்வைகளால், காலத்தைக் கழிக்க நினைக்கிறார். இன்னொருவரோ, ஒரே தேசம் — ஒரே இனம் — ஒரே ஐக்கியம் — எனும் போதை வஸ்துக்களால், நாட்களைக் கடத்த நினைக்கிறார். இந்

தத் தலைவர்களுக்கு இடையிலே கிடக்கும் கூட்டமோ, யாரை வசப் படுத்தலாம், எப்படி பர்மிட் வாங்க லாம், எவ்வழிகளில் பணத்தைக் குவிக்கலாம் என்று திட்டம் தீட் டியபடி திரிகிறார்கள். இந்த இக்கட் டான நிலைமையிலே, ஏழை மக்கள் புழுக்களாக நெளிகிறார்கள்—புழுங் கிச்சாகிறார்கள். இதனின்றும், மீள வழியென்ன?—அதுதான், இன்று மக்கள் மன்றம் எழுப்பும் கேள்வி! அதற்கு வேண்டிய வழிகளைச் செய் வதுதான் திராவிட முன்னேற்றக் கழகம்! அதனால்தான், நம்பிக்கை நட்சத்திரமாக எண்ணுகிறார்கள் நமது தோழர்களைக்காணும்போது!!

ஏழைகள் கூடாரங்களிலே கிளம்பிவிட்ட இந்த எழுச்சியை, கருப்புக் கண்ணாடியும், 'கனமான' தலையும் படைத்தவர், அறிய வேண் டும். அலட்சியப்படுத்தப்பட்டவர் கள்—கேலி செய்யப்பட்டவர்கள்— கிண்டல்களால் அழிந்துபோவார்கள் —ஆறுமாதம்,'மூன்றுமாதங்களால்' அழிந்துபோய்விடுவார்கள் என்று எண்ணப்பட்டவர்கள்—பவனி வரு கிறார்கள், இன்று! அவர்களைக்காண வும், குரல் கேட்கவும், இலட்சோப லட்சம் மக்கள் கூடுகிறார்கள்!! இந் தக் கோலாகலமான காட்சிகள் தரும் பாடத்தை, நாட்டின் தலைவிதியை நிர்ணயிப்பதற்காகவே தள்ளாத வய திலும் தடியூன்றியபடி வாழ்வதாகக் கூறித்திரியும் தலைவர்களுட அவர் தம் ஏடுகளும், காணவே கூசுகின்ற னர். சென்னைக் கடற்கரையில்கூடிய மக்கள் வெள்ளத்தையும், ஊர்வல மாகச்சென்ற உன்னதக் காட்சியினை யும் பத்திரிகைகளின் நிருபர்கள் இமை கொட்டாது, கண்டார்கள்! எனினும், 'இந்து'வில், 'மித்திர னில்',—'தினமணி'யில்இன்னும் பிற ஏடுகளில், இரண்டொரு வரிக ளைத்தவிர,எதையும்காணோம். அந்த வட்டாரத்தில், அதிகரித்துவரும் வயிற்றெரிச்சலின் அளவை, இந்த இருட்டிப்புக்காட்டுகிறது. இவர் களின் இருட்டடிப்பையெல்லாம் தாண்டி, ஏழைகளின் தோழனாக, ஆகிவிட்டது, திராவிட முன்னேற் றக் கழகம். என்னென்ன தொல்லை கள் தரப்பட்டாலும். துப்பாக்கிக் குண்டுகள் வீசப்பட்டாலும், கொண்ட கொள்கையைவிடாத, குன்றுகளாகிவிட்டார்கள், கழக வீரர்கள், அவர்கள் பாடுபடும்



கொள்கைகள், குடிசைகளுக்குள் பவனி வரத்துவங்கிவிட்டது—இத னாலேயே கோமளபுரி வாசிகள், கலங்குகிறார்கள்—சீமான்கள் மருள் கிறார்கள் — செங்கோலேந்திகள் அஞ்சுகிறார்கள்.

இந்த உண்மையினையே, இந்த வாரம் சென்னையிலும் வெளியூர் களிலும் கழக முன்னணிவீரர் களுக்கு மக்கள் வழங்கும் அன்பு வாழ்த்துக்கள், எடுத்துக்கூறுகின் றன. இது, நமக்கோர், தேனாறு! மாற்றாருக்கோர், மனஎரிச்சல் கட் டம்!! இந்தக் காட்சிகள், நமது இத யங்களில் உணர்ச்சியையும் உவகை யையும் தூண்டுகின்றன. மக்களின் தொடர்பு கொண்டவர்களாக அல்ல, தோழர்களாக! குடும்பத்தவர் களாக!! — ஆகிவருகின்றனர், தி. மு. க. வீரர்.

இதனை, சென்னைக் காட்சிகள் செப்பின—சிந்தையில் இன்பத் தைத் தேக்கின — 'செலுத்து கப்பலை! இருள் நீங்குகிறது—அதோ விடிவெள்ளி முளைத்துவிட்டது!!' எனும், ஆங்கிலக் கவிஞனொருவ னின் அழகிய வரிகளை நினைவூட் டின.

கழகம், நம் குடும்பம்! நாடு, நம் வீடு!!—இந்தப் பாசம் வளர்கிறது. நேசம், அதிகமாகிறது. பொது வாழ்க்கையில், இதைவிடச் சிறந்த கட்டம், எதுவுமில்லை.

★

திராவிட நாடு
பொங்கல் மலர்

—

சி. என். ஏ. தீட்டும்
கதை, கட்டுரைகள்
தாங்கி

✻

அதிக பக்கங்களுடன்

✻

அழகிய முகப்புடன்

✻

சிந்தனைச்
சித்திரங்களுடன்

✻

கருத்து விருந்தளிக்கும்!

✻

இந்த மலர்,
ஒரு வரலாற்று
ஓவியம்

விலை ரூ 1.

★

சந்தாதாரர்கள் டிசம்பர் 30-ந்தேதிக்குள், ரூ 1, அனுப்பி வைத்தல் வேண்டும்.

ஏஜண்டுகள் டிச. 30-ந்தேதிக் குள், மலரின் தேவையையும் அதற்குரிய, தொகையையும் அனுப்பவேண்டும்.

முன்பணமில்லாதோருக்கு கண்டிப்பாக மலர் அனுப்பப்பட மாட்டாது.

நிர்வாகி.

நகைச் சுவை ★ ★ நட்சத்திரம்!

கோணங்கிக் கூத்தாடி, குளறு வாயால்உளறி, கூடியிருப்போருக்கு நகைச் சுவையூட்டும் பாணி, கலைவாணர் என். எஸ். கே. வந்தபின், ஓரளவு மாறிவிட்டதென்று நினைத்திருந்தோம். அந்த நினைப்பில், மண்ணைப்போட, புதிய 'பபூன்' ஒருவர் புறப்பட்டிருக்கிறார்! நாட்டில், பவனி வரவும் ஆரம்பித்திருக்கிறார்!!

ஆஜானுபாகுவான தோற்றமும்—சரிந்துவிழும் தொந்தியுமே, போதும், நகைச் சுவைக்கு. அவருடைய உடையே, விசித்திரம் நிரம்பியது! உடையும், நடையும் போதாதென்று, உளறுவாய் திறந்தும் ஆங்காங்கும், ஏதாவது கொட்டிக் குழப்புகிறாராம்.

என். எஸ். கே. யின் சிந்தனைக் கிண்டல்களைக் கண்டு களிக்கும், நமக்கு, இந்த 'பபூனின்' புதிய சேட்டைகளைக் காணும் போது, ஒரு பக்கம் வேதனையும் மற்றோர் பக்கம் பரிதாபமும் உருவாகிறது.

ஏதாவது சொல்லி, எதையாவது செய்து, மக்களைச் சிரிக்க வைக்க வேண்டும் என்பதே, நாடகமேடை பபூன்களின் ஆசை! அதே போல, இந்த அரசியல் மேடை பபூனும், இஷ்டம்போல் ஏதாவது சொல்லி, கூடியிருப்போர், சிரிக்கிறார்களா என்று கணக்கிடக் கிளம்பியிருக்கிறார்!!

இந்த 'பபூன்', எங்கு சென்றாலும், போலீஸ் படை, பின்னாலே புறப்பட்ட வண்ணமிருக்கிறது — முன்னும் பின்னும் உயர்தர அதிகாரிகளின் பந்தோபஸ்து வேறு தேவைப் படுகிறது. அவ்வளவு கலாட்டாவா, இந்தப் பபூனைக் காண என்று கேட்பீர்கள், நீங்கள். கலாட்டா நேருகிறதென்பதற்கோ —அல்லது, கூடும் ஜனங்களிடமிருந்து இந்தப் பபூனைக் காப்பதற்கோ—நமக்குத் தெரியாது —ஏராளமான, போலீஸ் படை மட்டும், எங்கும் செல்கிறது.

அதுமட்டுமல்ல, இந்த நகைச் சுவை நட்சத்திரத்துக்கு, நம்முடைய வரிப்பணமும் செலவழிக்கப் படுகிறது! இது செல்லுவதற்கான, வண்டி—வாகனம்—எல்லாச்செலவுகளையும், சர்க்காரே மேற்கொண்டிருக்கிறது.

ஆச்சாரியார் ஆட்சியில், அடிவருடிகள்தானே, சர்க்காரின் கஜானாவை அனுபவிக்க முடியும். ஆகவே இந்தப் பபூனால், ஏதாவது நன்மைகள் உண்டோ, ஆச்சாரியாருக்கு?—என, நீங்கள் கேட்கலாம். உண்மைதான். ஆச்சாரியாரை நியமனம் செய்ததே, இந்த அரசியல் பபூன்தான்! நியமனம் செய்ததோடுமட்டுமின்றி, நித்த நித்தம் ஆச்சாரியார் புகழ்பாடி, ஆங்காங்கும் ஸ்தோத்திரம் செய்து'கொண்டும் வருகிறது.

விந்தையென்பீர்கள் — அல்ல; உண்மை! ஆச்சாரியாரை எம். எல். சி. யாக, நியமனம் செய்ததும், இந்த நகைச்சுவை மணிதான். பெயர், பிரகாசா. ஊர், காசி. இருப்பது, சென்னை ராஜ பவனத்தில்.

திகைப்பாயிருக்கலாம் உங்களுக்கு. மானிலத்தை யாளும் மகிபரையா, இந்தக் கேலிச் சொல்வீசி, கிண்டல் செய்கிறாய், என்று கோபமும் ஏற்படலாம்.

நான், என்ன செய்வது! அவருக்கு, ஹாஸ்யம் என்றால் மிகப் பிடித்தமாம் — அவரே ஹாஸ்யமாகப் பேசுபவராம் — அவரது நடையையும் உடையையும் பார்த்தாலும் அப்படித்தானிருக்கிறது- நடத்தையும், அதைத்தான் சொல்லுகிறது. ஆகவே, வேறு வழியில்லை-இதைத் தவிர எப்பெயர் சூட்டுவதென்றும் தெரியவில்லை.

நாடகமேடை பபூன்களைக் கண்டிருக்கிறோம்! அதேபோல, அரசியல் பேசித்திரியும் ஆசாமிகளுக்கு இப்பெயரைத்தானே சூட்டமுடியும்?

இந்தப் பபூன், அண்மையில், சென்னையிலிருக்கும் ஸ்காட்லாந்து மக்கள் கொண்டாடிய ஆண்ட்ரூ பிறந்த நாள் விழாவில் கலந்து கொண்டாராம். கூடியவர்களோ, ஸ்காட்டிஷ் மக்கள் — செயிண்ட் ஆண்ட்ரூவின் விழாவைக் கொண்டாடக் கூடினர். அவர்கள் மத்தியில் அமர்த்தப்பட்டிருந்த பிரகாசா, ஆண்ட்ரூவின் அருமை பெருமைகளைத் தானே பேசுவார் என்று எதிர்பார்த்திருப்பார்கள். அதுவும், இவர், கவர்னர் என்பதால்!

ஆனால், 'நம்ம' கவர்னர், அதைப் பற்றியெல்லாம் பேசவில்லை—ஆச்சாரியாரைப் பற்றி ஆரம்பித்து, அதியற்புத 'ஹாஸ்ய வேட்டு' ஒன்றை வெடிக்கச்செய்திருக்கிறார், கவர்னர்! நம் காசால் வாழ்பவர்!! அவர் ஹாஸ்யத்தை, நீங்களும், ரசியுங்கள்.

"போன வருஷம், உங்களுடைய விருந்தாளியாக, நம்முடைய மகாப் பெரிய முதல் மந்திரி வந்திருந்தார். உங்களுக்கெல்லாம், புனிதமான புத்திமதிகளை, அவரன்றி, வேறு யாரால் தரமுடியும்?"

இவ்வண்ணம், ஆச்சாரியார் அகவல், பாடிய பின், ஸ்காட்லாந்து மக்களைப் பார்த்துச் சொல்லியிருக்கிறார்.

"போன வருஷம், மழையே யில்லை. அதைப் பார்த்த முதல் மந்திரி மிகவும் கவலைப்பட்டார். என்ன செய்வதென்று, தெரியவில்லை, அவருக்கு. அதனால், எல்லா ஜனங்களையும் பார்த்து ஆண்டவனைக் கும்பிடுமாறு சொன்னார். அப்படிச் சொல்லியபோது

உங்களையும் பார்த்துச் சொல்லிவிட்டார். அவர் செய்த மாபெரும் தவறின் காரணமாக, நீங்களெல்லாம் ஆண்டவனைத் தொழ ஆரம்பித்தீர்கள். அதன் விளைவு, மழை பெய்தது மட்டுமல்ல—பயங்கரமான புயலும் ஏற்பட்டுவிட்டது. இதைக் கண்டு நான் ஆச்சரியப்படவில்லை! ஏனெனில், 'விஸ்கி'யையும் 'வொயினை'யும் காட்டி, இந்துக் கடவுள்களை, நீங்கள் பயமுறுத்தினால், அவர்கள் என்ன செய்வார்கள்? எதுவும் புரியாது, எது கூடாதோ அதையெல்லாம் நடைபெற அனுமதித்து விட்டார்கள். அந்த அதிர்ச்சியிலிருந்து, நாங்கள் இன்னும், தேறவில்லை. ஆகவே, உங்களை மிகவும் அன்போடு வேண்டிக்கொள்ளுவேன். நீங்கள், பிரார்த்தித்தது போதும். உங்கள் பிரார்த்தனைகளையெல்லாம், வாபஸ் வாங்கிக் கொள்ளுங்கள். இந்துக்களாகிய நாங்கள், ஆண்டவனைக் கும்பிடுவதற்கென்று சில வழி முறைகளை வைத்திருக்கிறோம். சோடாவும் விஸ்கியும் வைத்து அல்ல. நாங்கள் ஆண்டவனைக் கும்பிடுவது ஆகவே, எங்கள் கடவுள்களை நீங்கள் கும்பிட விரும்பினால், எங்கள் வழி முறைகளின்படியே வணங்குங்கள். உங்கள் இஷ்டப்படி, கும்பிடாதீர்கள். ஏனெனில் அதனால், பெருங் குழப்பம், ஏற்பட்டுவிடுகிறது.''

பேசியவர், பிரகாசா! இவ்விதம் அவர் பேசும்போது, அடிக்கடி, சிரித்தார்களாம்— கூடியிருந்தோர். இந்தப் பிரசங்கத்தைக் கேட்கும்போது, ஒன்று, சிரிக்கவேண்டும் — இவ்வளவு விசித்திரமானவரா, இந்த மாகாணத்தின் கவர்னராயிருக்கிறார், என்று! இல்லாவிடில், அழுதிருக்கவேண்டும் — இவ்வளவு வேடிக்கையானவரா, இந்த மாநிலத்துக்கு வாய்த்தார், எனும் வேதனையில்!! கூடியிருந்தோர், நல்லவர் ஒருவரின் பிறந்த நாளைக் கொண்டாடுகிறோம் எனும் எண்ணத்தில், அழாமல், சிரித்திருக்கிறார்கள்.

அந்த விழாவின்போது, விருந்தொன்றும் நடைபெற்றது. அந்த விருந்துக்கு, முக்கியசுடர், பிரகாசா தான். அவரோ, இவ்வண்ணம், பேசியிருக்கிறார்! ஸ்காட்லாந்து மக்கள், இந்துக் கடவுளை கும்பிட்டார்களாம் — அதுவும், ஆச்சாரியார் [illegible] அவர்கள், 'சோடா'வையும் 'விஸ்கி'யையும் வைத்துக் கும்பிட்டார்களாம்— அது, பொறுக்கமுடியவில்லையாம், நமது கடவுளர்களுக்கு. அதனால், புயல் ஏற்பட்டதாம.

ஒருவனை தேவன் எனும் சமரச மதமான கிருஸ்து மார்க்கத்தைச் சேர்ந்த ஸ்காட் மக்கள், இந்துக் கடவுள் பக்கம் திரும்பவா, செய்வார்கள்?—என்பது ஒருபுறமிருக்க; அவர்கள் சோடாவும், வொயினும் வைத்ததால், சாமிகளுக்குக் கோபமா, வரும்? சாதாரணச் சாராயமும் கள்ளும் கிடைக்காது—தவிக்கும் சங்கிலிக்கருப்பனும்—சந்திரத்துக் காளியும்—கருப்பணச்சாமியும்—ஐயனாரப்பனும், வொயினும், சோடாவும் கிடைத்தால், விட்டா விடுவார்கள்? பக்தர்களிடம், பரமசந்தோஷமன்றோ, ஏற்படும்! அதை மறந்துவிட்டார் போலும் நம் மாநில மேலாளர். ஒருவேளை, 'விஸ்கி'யையும் 'சோடா'வையும் அன்பர்கள் படைக்கின்றனரே எனும் ஆனந்தத்தில், கடவுளர்கள் பருகிவிட்டு — கடமையை மறந்து, போதையில் மூழ்கி, மழைக்குப் பதில் புயலை அனுப்பிவிட்டார்கள்!—என்று, சொல்ல எண்ணினாரோ, என்னவோ — இவ்வண்ணம் உளறியிருக்கிறார். அவர், சொல்ல நினைத்தது எதுவாகவாவது இருந்துவிட்டுப் போகட்டும். ஆளும் நிலையிலிருப்பவர், இவ்வித அசம்பாவிதமான 'அதிர்வேட்டுகளை' ஏன் வெடிக்கச்செய்ய வேண்டும்?

ஸ்காட் மக்கள், இந்துக் கடவுள்களைத் தொழுதனராம்! விஸ்கி, சோடா வைத்துக்கொண்டனராம்!! —நிஜமென்று நினைக்காதீர்கள். கவர்னருக்கு ஹாஸ்யத்துணுக்கை வீசவேண்டுமென்ற ஆசை அளவு கடந்து போனதன் விளைவு, இது.

ஏனித்த 'பபூன்' சேட்டை! என்ன எண்ணுவார்கள், ஸ்காட் மக்கள்—இவரின் அதிமேதாவிலாசத்தைச் சிலாகிக்கவா செய்வர்— ஆங்காங்கும் 'சர்வ மதமும் ஒன்றே' எனும் உன்னத விளக்கம் முழக்கப்படும் இந்நேரத்தில், இந்துக் கடவுளர்க்கும் இன்னொரு கடவுளுக்கும் வித்யாசமுண்டு — இந்தக் கடவுளை இப்படித்தான் வணங்கவேண்டும்— [illegible] புதிய [illegible] பழங்கப் புறப்படலாமா? இதுவா நகைச்சுவை? நாலுபேர் சிரிப்பார்களே கேட்டால்—நல்ல நகைச்சுவையென்று ரசிக்கவாமுடியும்? சிரிப்பது வேறு! ரசிப்பது வேறன்றோ!!

ஸ்காட் மக்கள், தம்முடைய நல்லெண்ணத்தை, தாம் வாழும் தென்னாட்டுக்குத் தெரிவிக்கும் எண்ணத்திலும்—இதுபோன்ற விருந்துகள் மூலம் இங்குள்ளோரின் தொடர்பைப் பெறும் ஆசையிலும்—இதுபோன்ற விருந்துகளையும், விழாக்களையும் ஏற்பாடு செய்கிறார்கள். அந்த விருந்தில், மருந்தைக் கலக்குவது—அதுவும், ஒரு கவர்னர் கலக்குவது—அதுவும், 'ஹாஸ்யம்' என்று நினைத்து விந்தைச் சொல் வீசுவதென்றால், இந்த விசித்திரத்தை, என்னவென்று சொல்வது!

விருந்துக்கு வந்தவர்களை வரவேற்ற காலிடோனியர் (ஸ்காட்லாந்தியர்) சங்கத் தலைவர், தோழர் மேக்னிகோல் என்பார், விளக்கமாக விவரித்திருக்கிறார், பல்லாயிரக்கணக்கான மைல்களைத் தாண்டி இங்கே வந்து தாங்கள் வாழும்படியான நிலைமை ஏற்பட்ட விபரத்தைப்பற்றி.

''அழகும், வசீகரமும் நிறைந்த எங்கள் தேசத்தைவிட்டு, ஏழு கடலையும் தாண்டி, எல்லா இடங்களையும் நோக்கி எம்மவர் சென்றிருக்கிறார்களென்றால், அது வேறு காரணத்தாலல்ல. ஏழ்மைதான், எங்களை, இங்கெல்லாம் துரத்தியது. உயர்ந்த குன்றுகளும், அழகிய வயல்களும், ஆர்வமிக்க உழைப்பாளர்களும் நிரம்பிய தேசம், எங்களுடையது. ஆனால், அத்தோடு, ஏழ்மையும் இருக்கிறது. அதனாலேயே, வெளிநாடுகள் நோக்கியெல்லாம் வந்தோம். அந்த ஏழ்மை யில்லாமலிருந்திருந்தால், வைஸ்ராயாயிருந்து இங்கே இரயில் வண்டி ஓடும்படி செய்த டல்ஹௌசி, அவர்கூட இங்கே வந்திருக்கமாட்டார்.

இன்று எங்கள் தேசத்தில், விஞ்ஞான விளைவுகளால், மின்சார சக்தியும்—அணு ஆராய்ச்சியும் — ஜனநாயக அரசாங்கமும் நடக்கலாம். நாடும், நல்ல முறையிலிருக்கலாம். ஆனால், எங்களையெல்லாம், அந்நிய நாடுகளுக்கு விரட்டிய அந்த ஏழ்மையை, நாங்கள் இன்னும் மறந்து

விடவில்லை. பிழைப்பதற்காக, வெளிநாட்டுக்கு ஓடிவந்தோம் — எனினும், எங்கள் பிறந்த பூமியைப் பற்றிய நினைப்பு, இதயத்தை விட்டு மறையவில்லை. ஆனால், அதற்காக, எங்கள் கடமைகளைத் தவற மாட்டோம். எங்களை வாழ்விக்கும், இந்த நாட்டுக்கு, என்னென்ன வழிகளில் பாடுபட வேண்டுமோ அவைகளைச் செய்வோம். இங்ஙனம், எங்கள் மீது காட்டும் அன்பும், ஆதரவும் நீடிக்குமென்று, எதிர்பார்க்கிறோம்,'' என்று கூறியுள்ளார்.

ஒரு நாட்டில் வந்து வாழும் அந்நியர்களுக்கு, எவ்வளவு அடக்கமும், சுயநலமற்ற சுபாவமும் வேண்டுமோ, அந்தளவுக்கு, அவர் பேசியுள்ளார். ஆனால், அவரது உரைக்குப்பின் பதிலளித்த 'நம்ம' கவர்னர், ஸ்காட்லாந்தின், மகிமைகளையெல்லாம் விவரித்தார்—இங்கிலாந்தின் தலையில் எப்படி ஸ்காட்லாந்து இருக்கிறது என்பதை விவரித்தார் —ஸ்காட்லாந்துக்கும் இங்கிலாந்துக்குமிடையே ஏற்பட்ட பிரிவினைப் போராட்டங்களைப் பற்றியெல்லாம் சொன்னார். இவ்விதமெல்லாம் வர்ணித்து விட்டு, கடைசியில் இன்னொன்றும் தெரிவித்திருக்கிறார்.

"நான், இவ்வளவு தூரம் உங்கள் நாட்டைப் பற்றிப் பேசினேன். ஏன், தெரியுமா? அவ்வளவு அழகான தேசமிருக்கும்போது, நீங்கள், ஏன் இங்கேயிருக்க வேண்டும்! —என்று கேட்கத்தான். உங்கள் தலைவர் 'ஸ்காட்லாந்தின் பெருமைகளைப் பற்றியெல்லாம், எடுத்துச் சொன்னார்—ஆனால், எப்போது அங்கே போகப் போகிறார் — டிக்கெட் 'புக்' பண்ணி விட்டாரா — என்பதைப் பற்றி, எதுவுமே கூறவில்லை''

காலிடோனிய சங்கத்தில், கவர்னர் தந்த, வாசகம் இது! அன்பர், பிரகாசா, விருந்துக்கு தந்த பதில், இது. ஏன், மூட்டைக் கட்டிக்கொண்டு புறப்படாமல், இங்கேயிருக்கிறீர்கள்? — அவர்களைப் பார்த்து, இவர் கேட்கிறார். கேட்க வேண்டிய கேள்விதான். ஏழ்மையும் இல்லாமையும் இருந்தால், அவைகளை ஒழிக்க சொந்த நாட்டிலிருந்து போராட வேண்டுமே யொழிய, வெளிநாடுகளிலிருந்தபடி வேதனைக் குரல், எழுப்புவதில் பொருளில்லை. வீட்டில் வெண்ணெயை வைத்துக்கொண்டு — வெளியூர் சென்று நெய்க்கு அலையும், பேதைமையை, எவரும் ஏற்கார். ஆனால், அதனை, பிரகாசா, இங்கே உட்கார்ந்தபடி சொல்லும்போதுதான், பற்பல பிரச்னைகள் உருவாகின்றன. மூட்டைக் கட்டிக்கொண்டு, ஏன் புறப்படவில்லை?—'டிக்கட் புக்' பண்ணியிருக்கிறீர்களா? — என்றெல்லாம், விருந்தளித்தோரைக் கேட்டிருக்கிறார். விருந்தில் கலந்துகொண்ட 'இந்து' சீனிவாசன் உள்பட எல்லோரும் சிரித்தனராம் — ஹாஸ்யமாக நினைத்து. அன்பர் பிரகாசா, இதனையும், நகைச்சுவைக்குரிய விஷயமாக நினைத்து பேசியிருக்கலாம். ஆனால், ஊராருக்கு உபதேசம் செய்யக் கிளம்பு முன், தன்னைப் பற்றியும், கொஞ்சம் சிந்திக்க வேண்டும். பரட்டைத் தலையன், வீதியில் செல்லுபவனைப் பார்த்து, 'ஏனப்பா; தலையை வாரி விட்டுக்கொள்ளாமலிருக்கிறாய்?' என்று கேட்பது, கேலிக்குரிய காட்சி.

கவர்னர், கலந்துகொண்ட விருந்துக்கு ஏற்பாடு செய்தது, காலிடோனியன் சங்கம். இந்தச் சங்கத்தின் பொருளை, அவர், அறிந்தாரோ— என்னவோ—நாம், அறியோம். ஆனால், பத்திரிகைகள் யாவும், 'ஸ்காட்லாந்தியருக்கு கவர்னர் புத்திமதி' என்று பிரசுரித்துள்ளன.

"காலிடோனியன்'' — என்கிற பெயரில், சீரழிந்த ஒரு மனித சமுதாயத்தின், சிதைந்த சித்திரம் இருக்கிறது! ஸ்காட்லாந்தின் வட பகுதியில் வாழ்ந்த பூர்வகுடிகளின் பெயர் இது. இன்று, ஸ்காட்லாந்து என்று கூறுகிறோம்! ஆனால், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு — அது ஸ்காட்லாந்து அல்ல—பற்பல பூர்வகுடிகள் வாழும்,பிரதேசமாகக் கிடந்தது. அங்கு வாழ்ந்தோரை 'பிக்ட்டு'கள் என்றும் இன்னும் பல பெயரிட்டும் அழைக்கிறார்கள். அவர்களுடைய இனவரலாற்றைப் பார்த்தால், அவர்கள் யாவரும், ஆரிய இனத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல, என்று ஆராய்ச்சி கூறுகிறது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு—சற்றேறக்குறைய தமிழகத்தில் ஆரியப்புயல் வீசத் துவங்கிய நேரத்தில் — அங்கு வாழ்ந்த கலிடோனியர்கள், சுகமாக வாழ்ந்தார்கள்! தனி மொழியினைப் பெற்றிருந்தார்கள்!!

ஆனால், அருகே இருந்த அயர்லாந்துக்காரர்கள் அவர்கள்மீது படையெடுத்து வெற்றி கொண்டார்கள் — அதற்குப்பின் ரோமாபுரியின் வீரர்கள், உள்ளே புகுந்து வெற்றி கண்டனர் — பிறகு, நார்மானியர்களின் யுத்த நடவடிக்கைகள் வேறு அவர்களைச் சின்னாபின்னமாக்கியது.

ஒன்றன்பின்னொன்றாக, பற்பல நாசகர மோதுதல்களைப் பெற்றதால், காலிடோனியரின் மொழி சிதைந்தது — பிறருக்கு அடிமையானார்கள்.

இப்படி, அடிமைகொண்ட பிறர், ஆரிய இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை, அன்பர் பிரகாசா, அறியாமலிரார்.

மத்திய ஐரோப்பியாவிலிருந்து, சிலந்தி தன் கால்களைப் பரப்புவது போல, உலகின் நாலுபக்கங்களிலும் பரந்து சென்ற, ஆரிய இனத்தின் வரலாறுகளை அவர் அறிந்திருக்கக்கூடும்.

அத்தகைய ஓரினத்தால், வீழ்ச்சியுற்றனர், இந்தக் கலிடோனியர்கள். அதனால் அவர்கள் 'ஸ்காட்லாந்தின்' வடபகுதிக்கு ஓடவேண்டியதாயிற்று!

இவர்களைப்பற்றி, சரித நூல்களில், 'பிக்ட்ஸ்' (Picts) எனும் பெயர் வழங்கப்படுகிறது. ஸ்காட்லாந்தின் தெற்கிலிருந்தோர், 'கெல்ட்டு'களென்று அழைக்கப்படுவார்கள். இந்த மக்களை, அந்நியர் படையெடுப்புகள், வீழ்த்தி வெற்றி கொண்டது. அதனால் அவர்கள் பேசிவந்த மொழியும் அழியலாயிற்று! அயர்லாந்திலிருந்து படையெடுத்த 'ஸ்காட்டு'கள் என்போரின் பெயராலேயே வழங்கப்பட்ட இந்த நிலப் பாகத்தில், ஸ்காட்டுகள்—பிக்ட்டுகள்—கெல்ட்டுகள்—ஆங்கிலர்—எனும் நால்வகைப் பிரிவினரும், ஒரே மதத்தைச் சேர்ந்தவர்களாக ஆக்கப்பட்டதற்குக் காரணம், கோலம்பா எனும் கிருஸ்துவ மதப் பெரியாராகும்.

இவ்வண்ணம், வேற்றாரின் வரவால் சிதைந்து—உருக்குலைந்து

... (11-ம் பக்கம் பார்க்க)

வாழ்த்தும் வணக்கமும்

தாயகத்தின் விடுதலைக்காக, மழலையின் மொழியையும் மனைவியின் காதலையும் மறந்து, பெற்றோரிடம் விடைபெற்ற வண்ணம், அறப்போரிலீடுபட்டு, ஆளவந்தாரின் வெறியாட்டத்துக்கு இரையாகி, சிறைச்சாலைக்குள்ளே கிடக்கும், தாயகத்தின் கண்மணிகளாம் நம்முடைய சகோதரர்களுக்கு, நம்முடைய வாழ்த்துதல்களையும் வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். வாழ்க, வீரர்கள்! ஒழிக அடக்குமுறை!!

திராவிடநாடு

காஞ்சி] 6—12—53 [ஞாயிறு

அவலட்சணம்!

கத்திரிக்காயை வாங்கி வந்து' 'காதலீ! என் கண்ணாட்டி! இதனைக் கறி சமைப்பாய்,' என்று கூறிய தோடில்லாமல், 'சாம்பார் வைப்பதற்காகத்தான் வாங்கி வந்தேன். பருப்பு, அதிகமாயிருக்கட்டும். உப்பு, கொஞ்சம் போதும். பெருங்காய வாசனையும் இருக்கட்டும்,' என்று விவரித்தால்; வீட்டுக்காரி, தயிர்ப் பச்சடியும், உருளைக்கிழங்கு வறுவலுமா, செய்ய முடியும்? கத்திரிக்காய் - கணவன் சொல்லியபடி- சாம்பாராகத்தானே, காட்சியளிக்கும்! அதனால்தான், ஆச்சாரியார் நியமித்த கல்வி ஆலோசனைக் குழுவின் முடிவுகள் வெளியாகி, நான்கைந்து நாட்களாகியும், மக்கள் மன்றத்தில், ஆனந்தமோ, அகமகிழ்ச்சியோ, தென்படவில்லை - ஐம்பது ஆண்டுகளாகத் தன்னுடைய மூளையில் வளர்ந்து உருப் பெற்றதாகக் கூறி, அவசரக்கோலம் தெளிப்பது போல ஆச்சாரியார் நுழைத்த, இந்தத் திட்டத்தின்மீது அன்று ஏற்பட்ட அதிருப்தியின் 'எடை'யும், ஆத்திரத்தின் 'அளவு'ம் குறையவில்லை.

இந்த நிலைமைக்கு, ஆலோசனைக் குழுவினரையும், அதன் தலைவர் பருலேகரையும், நாம் குற்றம் கூறவில்லை-பரிதாபப்படுகிறோம் - கணவனுக்குக் கட்டுப்பட்ட காரிகை போல. இந்தக் கல்வித்துறை நிபுணர்கள் கைகட்டிச் சேவகம் செய்து திரும்புகின்றனரே, எனும் வேதனையால்

ஆச்சாரியார் கொண்டு சுமத்திய அவசரத் திட்டமும்-அது வளர்ந்த அரைத்தங்களும் - அதற்கு அவர் கூறிய வியாக்கியானங்களும் - திருவான்மியூரில் செய்திய 'வர்ணாசிரம தர்மோபதேசமும்-' நாட்டு மக்களின் உள்ளங்களை, எரிமலையாக்கியதை, மக்கள் அறிவர். அதன் தீமையையும், ஆச்சாரியார் திட்டமிட்டுச் செய்யும் சதியையும் கண்டதாலேயே, நாம், கண்டனக் குரல் எழுப்பினோம்-நாடெங்கும், 'வேண்டாம்! வேண்டாம்!' எனும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது மக்களால்- எம். எல். ஏ. க்கள் பலர், மகஜர்கள் அனுப்பினர்-எல்லா அரசியல் கட்சியினரும், காங்கிரஸ் உட்பட, ஆச்சாரியாருக்கு எடுத்துரைத்தனர் - அன்போடு. ஆனால், அதனை ஏற்க மறுத்து, 'என்னையா, எதிர்த்துரைக்கக் கிளம்புகிறீர்கள்?' என்று கோப விழிகளை உருட்டி, வேகச் சொற்களை வீசி, வேலும் வாளும் தைப்பது போன்ற, விசித்திரமான விளக்கங்களை வெளியிட்டார்- தடிகளையும் துப்பாக்கிகளையும் காட்டினார். தியாகராய நகரில் கோரிக்கையைக் கூறச் சென்ற நமது தோழர்களின் மண்டையைப் பிளந்தார் — நூற்றுக்கணக்கானோரை, சிறையிலே பூட்டினார். 'குழந்தைச் செல்வங்களின் வாழ்க்கையைக் கொத்தாதே!' என்று கூறுவதற்கா; இவ்வளவு கோரங்கள்?-என்று, நாட்டோர், திகைத்தனர். நாட்டோரின் தூதர்களாகிய எம். எல் ஏ. க்களும் சட்டசபையில், ஆச்சாரியாரின் சர்வாதிகாரப் போக்கைக் கண்டித்தனர்-"உடனடியாக கல்விச் சீர்திருத்தத்தை நிறுத்தி வைக்கவும்; அதுசம்பந்தமாக ஆலோசிக்க ஒரு கமிட்டி நியமிக்கவும்," என்று தீர்மானம் நிறைவேற்றினர். அதனை ஏறெடுத்தும் பார்க்கவில்லை! அலட்சியமாகப் பார்த்தார்!! அதன் விளைவு, தன் பதவிக்கே விபரீதத்தைத் தருமென்னும் ஆபத்து தென்பட்டதும், 'இதோ, ஆலோசனைக் குழு!' என்றார்.

அந்தக் குழுவில் சென்னை மாநிலத்தின் சிறந்த கல்வி நிபுணர்கள் இல்லை — கல்வித் திருத்தம் கூடாதெனக் கண்டித்த ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் இல்லை — ஆச்சாரியாரின் திட்டத்தில் குறைபாடுகளைக் கண்டுபிடித்துக் கூறிய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் இல்லை— சொந்தக் கட்சியிலேயே தூயவரெனப் போற்றப்படும் ஓமந்தூரார் போன்றார் இல்லை—ஆனால், பம்பாயிலிருந்து ஒருவரும், டில்லியிலிருந்து மற்றொருவரும், சென்னை சர்க்கார் செக்ரட்டேரியட்டிலிருந்து இன்னொருவரும்; ஓய்வு பெற்ற ஒரு அதிகாரியும் நியமனம் செய்யப்பட்டனர். பருலேகர் — பி பி டே — மஜீப்—எனும் பெயர்களைக் கண்டதுமே, 'கத்திரிக்காய் கதையாகும்' என எதிர்பார்த்தனர், மக்கள். இன்னொருவரான கோவிந்தராஜுலு என்பார், சர்க்காரில் சம்பளம் பெறுபவர் — இந்தக் கல்வித் திட்டத்துக்கு ஆதிமுதல் ஒத்து ஊதுபவர். இந்நிலையில், இது வேறும், கண்துடைப்பே என்று கருதினர், நல்லோரும்.

அதை உண்மையாக்குவது போல் அந்த 'நிபுணர்கள் குழுவுக்கு' சட்டாம்பிள்ளையானார், ஆச்சாரியார்! கல்வி சம்பந்தமான, சகல விஷயங்களையும் ஆலோசித்து, எனக்கோர் திட்டம் தாருங்கள்— என்று, அக்குழுவைக் கேட்கவில்லை. "இதோ, பாருங்கள்! இதுதான், நான் கொண்டுவந்து புகுத்தியிருக்கும் கல்வித்திட்டம்—இதன் நோக்கம் கல்வியின் தரத்தையும் படிக்கும் பிள்ளைகளின் எண்ணிக்கையும் அதிகமாக்குவது. இந்த நோக்கம் நிறைவேற, இந்தக் கல்வித் திட்டம் எவ்வளவு தூரம் பிரயோஜனமாயிருக்கும். இது பற்றி, ஆலோசனைகளைக் கூறுங்கள்" என்று அந்தக் குழுவுக்கு, 'கடிவாளங்களை'ப் போட்டார், சாம்பாரில் இன்னின்னயிருக்க வேண்டுமென்றானே கணவன்—அவனைப்போல. காரிகை, என்ன செய்வாள்! பருப்பு —உப்பு—காயம்—கடுகு—ஆகியவைகளைச் சரியாகப்போட்டு, கத்திரிக்காயைச் சமைத்துத் தந்திருக்கிறாள்!!

இதைக் காணும்போது, யாருக்குத்தான், மகிழ்வேற்பட முடியும்?

ஏங்கினேன், நிமிர்ந்துபார்க்கிறேன்— அவனுக்குத் தெம்புதரும் சிறு நம்பிக்கையும், தென்படவில்லை!

*

பள்ளிக்குச் செல்லும் குழந்தைகளின் படிப்புக்காலம், குறைகிறது, என்றோம்.

தொழில் கற்பதென்னும் பெயரால், குழந்தைகளின் அரும்புப் பருவத்தைக் கசக்குகிறீர்கள், என்றோம்

இவைகள், அப்படியே இருக்கின்றன! ஆச்சாரியாரின் திட்டத்தில், நாமும் மக்களும், எவையெவை கூடாதென்றனவோ, அவைகளே சிறந்தவைகள் என்று குழு, கூறுகிறது. கூறாமல், என்னசெய்யும்? தன் குரலுக்குக் கட்டுப்படுவோரைத்தானே நியமித்துக்கொண்டார், ஆச்சாரியார். ஆகவே, அவர் விருப்பம்போலவே, முடிவுகள் வெளிவந்திருக்கின்றன. எனினும், சில, விருப்பங்களையும் சந்தேகங்களையும் தெரிவித்திருக்கிறார்கள். எதற்கு? இந்தத் திட்டம் வேண்டாமென்று கூறுவதற்காகவா!— அல்ல, அல்ல. அந்த சந்தேகங்களைப் போக்கும் விதத்தில், சர்க்கார் நடவடிக்கையெடுக்கவேண்டும், என்பதற்காக.

நிபுணர், குழுவல்லவா! ஏதாவது. கூறித்தானே ஆகவேண்டும்!! —அந்தச் சடங்கை, சாமர்த்தியமாக, முடித்திருக்கிறார்கள். அதன்படி, அவர்கள் வெளியிட்டிருக்கும் முக்கிய யோசனைகள்:

காலையில் ஒரு வாரமும், பிற்பகல் ஒரு வாரமும் மாறி மாறி, மாணவர்கள் பள்ளிக்கூடத்துக்கு வரலாம்.

கூடிய சீக்கிரம் இந்தக் கல்வித் திட்டத்தை நகரங்களுக்கும் அமுல் நடத்தவேண்டும்.

திட்டத்தின் நோக்கங்களையும் முறைகளையும் ஆசிரியர்கள் அறிந்து கொள்ளத் தகுதியான ஏற்பாடுகள் செய்யவேண்டும்

புதுத் திட்டத்தைப்பற்றி உபாத்தியாயர்களை அடிக்கடி பரீட்சிக்க வேண்டும்

பொதுமக்களுக்கு இத்திட்டத்தைப்பற்றி விளக்க, அதிகாரிகளும் பொதுமக்களும் கொண்ட ஒரு ஸ்தாபனத்தை நிறுவவேண்டும்.

செகன்டரி டிரெயினிங் பெற்ற ஆசிரியர்கள் ஆரம்பப்பள்ளிக்கூடங்களில் சேர்ந்தால், அவர்கள் சம்பளத்தைக் குறைக்கக்கூடாது.

புதுக் கல்வித் திட்டத்தைப் பரப்ப ஆசிரியர்களுக்கு உற்சாகமூட்டவேண்டும் அதற்காக, உடனடியாக அவர்கள் சம்பளத்தை உயர்த்த வேண்டும்.

டெபுடி இன்ஸ்பெக்டர்களின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டும்.

சர்க்கார் உத்யோகஸ்தர்மூலமாகவும், உத்தியோகப் பற்றற்ற ஸ்தாபனங்கள் மூலமாகவும், அதிக பிள்ளைகள் படிக்கும்படி தீவிரப் பிரச்சாரம் செய்யப்படவேண்டும்.

பள்ளிக்கூடத்துக்கு குழந்தைகளைக்கொண்டு வரவும், பள்ளிக்கூடமில்லாத நேரங்களில் குழந்தைகளுக்கு பொழுதுபோக்கும் வழிகளைச் செய்யவும் ஒவ்வொரு கிராமத்துக்கும் ஒரு ஊழியரைக் கௌரவ முறையிலோ, சம்பளம்கொடுத்தோ நியமிக்கவேண்டும்.

தொழில் கற்றுக்கொடுக்கும், கிராமத் தொழிலாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்படவேண்டும். அதற்கோர் திட்டம் தீட்டப்படவேண்டும்.

இவ்வண்ணம் தொழில் கற்றுக்கொடுக்க முன்வரும் தொழிலாளருக்கு பொருளுதவி அளிக்கவேண்டும்.

பள்ளிக்கூடம் இல்லாத நேரத்தில் குழந்தைகள் ஈடுபடும்தொழிற் கல்விக்காக, சில்லரைச் செலவுகளுக்கென பள்ளிக்கூட ஹெட்மாஸ்டர்களிடம் சிறு தொகை கொடுத்து வைக்கவேண்டும்

புதுப்பள்ளிகள் ஏற்படுத்துவது பற்றி புள்ளிவிபரம் சேகரிக்கவேண்டும்

இந்த ஏற்பாடுகளைச் செய்தால், இந்தப் புதுக் கல்வித் திட்டம், பொன்னான திட்டமாகிவிடுமாம்! கூறுகின்றது, குழு ஆனால், இவர்கள் கூறும் செலவுகளைச் சமாளிக்க எங்கே செல்வார், ஆச்சாரியார்?

செலவைக் குறைத்து, அதிகமான குழந்தைகளைப் படிக்க வைப்பதற்காகவே, இந்தக் கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்தேன் என்கிறார் அவர். ஆனால், நிபுணர்குழு, செலவு பெருகுவதற்கான வழிகளைக் கூறுகிறது!

“அரசியல் திட்டப்படி பத்து ஆண்டுகளில்—14 வயதுக்குட்பட்ட எல்லோருக்கும் கட்டாயக் கல்வி முறையை அமுல் நடத்த வேண்டும்—அதற்கோ, பணமில்லை — குழந்தைகளோ, அதிகம் இருக்கிறார்கள் — ஆகவே, பள்ளிக்கூடப் பாட நேரத்தைக் குறைத்து, காலையில் ஒரு முப்பது குழந்தைகளும், மாலையில் ஒரு முப்பது குழந்தைகளுமாக, வந்து படித்து விட்டுப் போக வேண்டுமென்பதே, இக்கல்வி முறையின், நோக்கம். இது, மிக சிலாக்கியமானது”, என்று வாணிக்கிறது, நிபுணர், குழு!

அதே வாயாலேயே இந்தத் திட்டத்தை மக்களிடம் விளக்கவும்— படிக்காத குழந்தைகளை அழைத்து வர ஆள் நியமிக்கவும்—ஆசிரியருக்கு சம்பளம் அதிகமாக்கவும் வேண்டுமென்று கூறுகிறது—இது, சாத்யமானதா? என்பது ஒரு புறமிருக்க, 6 மணி நேரம் வேலை செய்து வந்த ஆசிரியர்கள் 8½ மணி நேரம், வேலை செய்ய வேண்டுமாம்—அதனை அவர்கள் சகிப்புத் தன்மையோடு செய்ய வேண்டும். சில காலத்துக்குச் செய்தால், பிறகு சரியாகப்போய் விடுமாம்—நிபுணர் குழு கூறுகிறது.

அவ்விதம் காலையிலும் மாலையிலும் பள்ளிக்குச் சென்று படிக்கும் ‘ஷிப்ட்’ முறை, பிலிப்பைன்— நார்வே — டென்மார்க் — முதலிய இடங்களில் அமுல் நடத்தப்படுவதாகக் கூறுகிறது. அங்குள்ள மக்களின் மனவளம் வளர்ந்து கிடப்பதையும், இங்குள்ள காத்தானும் குப்பனும், இருக்கின்ற நிலைமையும், இந்தக் குழு சிந்தித்துப் பார்க்கவில்லை.

எப்படியாவது, ஆச்சாரியாரின் கூற்றுக்கு, ஆதரவு தேட வேண்டுமெனும் விருப்பத்தில், ‘மூன்று மணி நேரப் படிப்பால், எல்லாக் குழந்தைகளுக்கும் கல்வி கிடைக்கும்படிச் செய்துவிட முடியும்’, என்று கூறுகின்றனர். மீதியிருக்கும்

மூன்று மணி நேரத்தில், தந்தையின் தொழிலையோ அல்லது விரும்பிய தொழிலிலோ ஈடுபடுவதால், குழந்தைகள் யாவரும், எதிர்காலப் பிரஜைகளாக இப்போதிருந்தே, தயார் செய்யப்படுவார்களாம்.

இங்ஙனம், பாதிவேளை பள்ளிக்கூடம் போக மீதி நேரத்தில் தொழிலைக் கற்க வேண்டிய குழந்தைகள், தங்கள் தந்தையின் தொழில்களைக் கற்றுக் கொள்ளலாமாம்; இல்லையெனில், கிராமத் தொழிலாளர்களிடம் சென்று அவர்களுடைய தொழில்களைக் கற்றுக் கொள்ளலாமாம்; அதுவும் விருப்பமில்லையெனில், எளிதான விவசாய முறைகளைக் கற்றுக் கொள்ளலாமாம்; இதுவும் ஒத்துவரவில்லையென்றால், தோட்டம் பயிரிடல், சுகாதார சேவை போன்றவைகளில் ஈடுபடலாமாம்; கடைசியாக, இது எதுவும் ஒத்துவரவில்லையெனில், உடலுறுதி பயக்கும்படியான 'ஏதாவது ஒரு வேலை'யைச் செய்யலாமாம்.

'ஏதாவது' என்பதற்கு, தெளிவான விளக்கத்தைத் தரவில்லை. ஆனால், பருலேகர் குழு கூறுகிறது—விளையாட்டு, செடி நடல், கிராமப் பொருளாதாரம், சாரணவேலை, என்பதாக. பெண்கள், சமையல் கற்றுக்கொள்ளலாமாம்; அப்பளாம், வடாம் செய்யக் கற்றுக்கொள்ளலாமாம்! இந்தத் தொழில்களை குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுக்கும் கிராமத் தொழிலாளிகளுக்கு, பயிற்சி அளிக்கவேண்டுமாம்—அப்போதுதான், எப்படிக் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுப்பதென்பதை, அவர்கள் அறிவராம். இப்படி, பள்ளிக்கூடத்துக்கு வெளியில், தொழில்களைப் பயிற்றுவிப்பதுபற்றி, குழு தெரிவிக்கிறது:

''திருத்தப்பட்ட திட்டத்தில் பள்ளிக்கூட நேரங்களுக்குப் புறம்பாக, குழந்தைகள் அலுவல்களுக்கெனக் கூறப்படும் நோக்கங்கள் எவ்வளவு தூரம் நிறைவேற்றக் கூடும் என்பதை ஆராய்வோம். நோக்கம் நல்லவை என்பதில் ஐயமில்லை. நிறைவேறின் பெருந்தொகையினரான குழந்தைகளுக்கு பூரணக் கல்வி கிடைக்கும். இந்நோக்கங்கள் நிறைவேற, திருந்திய திட்டத்தில் உருப்படியான யோசனைகளும் வழிகளும் உண்டா என்பதே, பிரச்னை''

''பள்ளிக்கூடத்துக்கு வெளியே நடக்கவேண்டிய திட்டம், பலவகையானது, கிராமப் பள்ளிக்கூட ஆலோசனை சபைகள் இவற்றில் கவனம் செலுத்தலாம். ஆனால், இச்சபைகள் திருப்திகரமாக வேலை செய்வதில்லை. பிரஜா உணர்ச்சி வலுப்படவில்லை. கிராமச்சிற்பிகள் எவ்வளவுதூரம் திட்டத்தில் ஒத்துழைப்பரோ, தெரியாது. மக்கள் பெரும்பாலும் அசட்டையாயிருப்பர். தொழில் செய்பவர், வறுமையில் உழல்பவர்; கல்வியற்றவர். ஆகவே, இந்த நிலையில் பள்ளிக்கூடத்துக்குப் புறம்பான திட்ட விஷயத்தில் தகுந்த ஏற்பாடுகள் செய்யவேண்டும்''

''கிராமச் சிற்பிகள், விஞ்ஞானத் தொழில் முறை அறியாதவர். குழந்தைகளைச் சமாளிக்க அறியாதவர். குழந்தைகள் கேட்கும் பல கேள்விகளுக்கு அவர் பதில் சொல்லமுடியாமல் திகைக்கலாம். இவ்விஷயத்தில் அவர்களுக்குப் பயிற்சியளிக்கவேண்டும்''

''தொழிற் சிற்பிகளுக்குப் பயிற்சியும், பண உதவியும் அளித்தால்தான், அவர்கள் கூட்டுறவு பயனுடையதாக விளங்கும்''

இன்றைய குழந்தைகளை, எதிர்கால உலகமாக்கிட, இந்தக் குழு, கூறுகிறது, இவ்விதம்! கிராமங்களிலிருப்போரது குழந்தைகள், இப்போது இன்பம் அனுபவித்துக் கிடக்கிறது எனும் எண்ணம் போலும்!!

ஆச்சாரியாரது அதியற்புதத் திட்டம் உருவாதற்கு முன்பிருந்தே இவர் கூறும் எல்லாத் தொழில்களையும் கற்றவர்கள் இருந்துகொண்டே வருகிறார்கள்! அவர்களுக்கு சட்டம் போட்டு அல்ல இத்தொழில்கள் வருமாறு செய்வது. சாதாரணமாக, ஓரளவு வயது வந்ததுமே அவனவன் தன்னுடைய பொறுப்புகளை நடத்தத் துவங்கிவிடுகிறான்! சின்னஞ்சிறு பெண், வயது வந்தவளானதும், தானாகவே சமைக்கவும் போடவும் கற்றுக்கொள்ளுவாள். இதற்கு, ஆச்சாரியாரது, அதியற்புதத் திட்டமா வேண்டும்? சமையல் செய்வது, பள்ளிக்கூடத்துக்கு வெளியில் பெண்களுக்குக் கற்றுக் கொடுக்கிற தொழிலாம்! இதனை, எங்கே அழைத்துப்போய் கற்றுக் கொடுப்பார்களோ தெரியவில்லை. கிராமங்களில் உலைக்கூடமும், தச்சுக்கூடமும் வைத்திருப்பவர்களுக்கு சர்க்கார் 'பயிற்சி' தருமாம்! உழைத்தால் வாழக்கூடிய அவர்கள், உண்ண உணவைத் தேடுவார்களா — அல்லது பயிற்சி நாடிச் செல்வார்களா? அவர்களுக்கெல்லாம் ஊதியம் வழங்கப்படுமாம். இதற்கெல்லாம், ஆச்சாரியார் எங்கே போவாரோ பணத்துக்கு—யாமறியோம்!

வெறும் பிரமையில், கனவுக் கோட்டைகள், கட்டியிருக்கின்றனர்-இந்தக் குழுவினர். ஆச்சாரியாருக்கு, 'ஆமாம்' போடும் நிலைமைக்குத் தங்களைத் தாழ்த்திக் கொண்டதால், இவர்களது 'அறிக்கை' மிகவும் கேவலமாகக் காட்சி அளிக்கிறது,

ஆனால், ஒரு விஷயத்தில், இந்த நிபுணர் குழுவின் துணிச்சலைப் பாராட்டத்தான் வேண்டும் - ஒரு உண்மையை, ஒளிவு மறைவின்றி, ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்-நான்கு மாத காலங்களில், இவர்கள் எப்படி இந்தப் பரிசீலனையை நடத்தியிருக்கிறார்கள், தெரியுமா? அவர்களே கூறுகிறார்கள்.

''இந்தத் திட்டத்திலுள்ள ஒவ்வொரு அம்சத்தையும் பற்றி பரிசீலனை செய்ய நாங்கள் விரும்பவில்லை''

''நாங்கள் பெருவாரியான பள்ளிக்கூடங்களைப் பார்வையிடவில்லை. சென்னைக்கருகாமையிலுள்ள சில பள்ளிகளையே பார்த்தோம்''

''அவைகளும், இப்போதுதான் இத் திட்டத்தைப் புரிந்துகொள்ள ஆரம்பித்திருந்தன. ஆகவே மாகாணத்தைச் சுற்றிப் பல பள்ளிக்கூடங்களைப் பார்ப்பதால், பலனில்லை என்று தீர்மானித்தோம்''

இப்படியல்லவா, இருக்க வேண்டும், நிபுணர்கள்! அருமையான ஒரு ஆச்சாரியார்—அவருக்கெனக் கிடைத்த விசித்திரமான குழு—எல்லாம், ஒரே அவலட்சணமயம்.

★

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

போயிருந்தும்—இங்கேயிருப்போர் 'கலிடோனியன்' எனும் பெயராலேயே தமது சங்கத்தை வைத்துக் கொண்டிருக்கிறார்கள்! இந்தப்பெயர் இன்று எவருக்கும் புரியாது!! எனினும், இவர்கள், இன்னும் தமது பூர்வப் பெருமையின் மீதும்—பண்பாட்டின் மீதும்—கொண்டிருக்கும், ஆவலைக் காட்டுகிறது.

எத்தனையெத்தனையோ, சண்டைகள்! மதப் போராட்டங்கள்!! எனினும், அந்தப் பெயரிலே, ஒரு உவகையைக் காண்கிறார்கள், இவர்கள்.

இங்கிலாந்து—ஸ்காட்லாந்து இரண்டு வேறு, நாடுகள். எனினும், இரண்டுக்கும் ஒரே அரசுதான், இன்று.

இங்கிலாந்தில் வாழ்வோரைவிட, ஸ்காட்லாந்தில் வாழ்பவர்கள், நிலத்துக்கு உரிமையானவர்கள்.

எனினும் பிரிட்டிஷ் அரசியே, ஸ்காட்லாந்தையும் ஆளுகிறார். இந்த ஸ்காட்—தனிநாடாக வாழ்ந்து வந்த காலமும் உண்டு. இருதனித் தனி அரசுகள் இருந்தபோது சண்டைச் சச்சரவுகள் நடந்ததும் உண்டு — சமாதானமும் கலியாண சம்பந்தங்களும் நடை பெற்றதும் உண்டு.

இப்போது, ஸ்காட்லாந்துக்குத் தனியரசு கிடையாது—ஆனால், பிரிட்டிஷ் பார்லிமெண்டிலே ஸ்காட்லாந்து நாட்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இருக்கிறார்கள்.

இரண்டும் இணைக்கப்பட்டது, 1603-ல். 247-ஆண்டுகள், ஆகிவிட்டன. ஆயினும், ஸ்காட்லாந்து மக்கள் தனித்துவாழவே, ஆசைகொள்கின்றனர்.

அதுசம்பந்தமான கிளர்ச்சிகளும் நடைபெற்றபடியே இருக்கிறது.

இந்தக் கிளர்ச்சிகளில், 'காலிடோனியர்' எனக் கருதப்படும் வடக்கு ஸ்காட்லாந்திலிருப்போரே, தீவிரமாக ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றனர்.

இந்த விபரங்களை, அறிவாரோ, என்னவோ, நம் பிரகாசா. கலிடோனிய மக்கள், வாழ்ந்தவர்கள்! வஞ்சகத்துக்கும் எதிரிகளின் பேராசைக்கும் இரையானதால் சரிந்துபோனவர்கள்!! இந்தச் சரிதக் குறிப்பையே, சுருக்கமாகத் தந்து, 'ஏழ்மையால் ஏழுகடலையும் கடக்க வேண்டியவர்களானோம்' என்று வெளியிட்டிருக்கிறார், விருந்துவைத்த சங்கத் தலைவர்.

விருந்தை அருந்திய கவர்னரோ, 'எப்போது வெளியேறப்போகிறீர்கள்?' என்று கேட்டிருக்கிறார். இந்தக் கேள்வி கண்டதும், பலர், சிரித்தனராம்! சிரிக்காமல் என்ன செய்வது? ஒண்ட வந்து ஊராள்பவன், உதைபட்டதால் உயிர் வாழ வந்தவனைக் கேலி பேசினால், நகைப்பு வராமலா இருக்கும்! கவர்னர், காலிடோனியருக்குப் புத்திமதி புகன்றாராம் யாரிந்தக் கவர்னர்? இவருக்கும், தென்னாட்டவருக்கும் சம்பந்தமென்ன? இவர் யார், ஒருவரை இருக்கச் சொல்லவும்—போகச் சொல்லவும்—என்ற கேள்விகள், எழாதெனும் எண்ணம் போலும்.

நாட்டுக்குரியோராயிருந்து, நலிவுற்ற காரணத்தால், வேற்று நாடு வந்து, விஞ்ஞானத்தாலும் விவேகத்தாலும் உயிர் வாழும் காலிடோனியர்கள், கனத்த குரலில் எதுவும் பேசவில்லை—நாங்கள், அன்னியர்தான்; எங்கள் நாட்டின் மீது எங்களுக்கு அன்பும் ஆர்வமும் உண்டு; ஆயினும் எங்களை வாழ்விக்கும் இடத்தின் பெருமையை உயர்த்த இயன்றதைச் செய்வோம், எனச் செப்புகிறார்கள்.

அவர்களைப் பார்த்து, 'நீங்கள் ஏன் இன்னும் இருக்கிறீர்கள்?' என்று கேட்கும் பிரகாசா, வடநாட்டுக்காரர்-தமிழ் மொழி பயின்றவரல்ல-நடை, உடை, பாவனைகள், அத்தனையிலும் அந்நியர். எப்படி காலிடோனிய சங்கத்தார் ஆங்கிலத்தின்மீது அமோக மோகம் உண்டென்று தெரிவிக்கிறார்களோ, அதேபோல இவரும் தன்னுடைய இந்தி மொழியிடம் ஏராளமான ஆசை கொண்டிருப்பவர் — அதன் பெருமைகளைப் பற்றி ஆங்காங்கும் பேசுபவர். இவர், குரலில், காலிடோனியரிடம் காணப்படும் குழைவும் நெளிவும் காட்சி தருவதில்லை. கனத்த குரலில், பேசுகிறார். அவர்கள், பயந்த சுபாவத்தோடு, எல்லோரது ஒத்துழைப்புடனும் இருக்கின்ற வரையில் காலத்தைத் தள்ளிவிட்டுப்போவோம், எனும் நினைப்பில், பேசுகிறார்கள்! இவரோ, நம்மை பயமுறுத்தும் எண்ணத்தோடு, 'நான் யார் தெரியுமா?' எனும் குரலில், நம்மை மிரட்டுகிறார். நமக்குத் தலைவராக அமர்ந்திருக்கிறோம் எனும் தைரியத்தில், வெளிநாட்டினரான காலிடோனியர்களைப் பார்த்து மிரட்டுகிறார்-அவர்கள் உள்ளம் புண்படும் வார்த்தைகளையெல்லாம், வீசுகிறார். இந்த வக்கிரபுத்திக்காரருக்கு,எங்கிருந்து, பிறந்தது-இத் தைரியம்?

காலிடோனியர்களிடம், படையில்லை—பலமில்லை.

இந்த டில்லிக்காரரிடமோ, இரண்டும் இருக்கிறது.

இதுதான் வித்தியாசமேயொழிய திராவிடத்தைப் பொறுத்தவரையில் இருவரும் வெளிநாட்டினர் தான்.

நாளைக்குச் சாகப்போகிறவன், இன்றைக்குச் சாகக்கிடப்பவனிடம் கேலி பேசுவதுபோல—அவர்களைக் கேட்கிறார், 'எப்போது டிக்கட் வாங்கப் போகிறீர்கள்?' என்று.

அதே கேள்வியை, நாம், அவரைத் திருப்பிக் கேட்க விரும்புகிறோம்.

'ஸ்காட்' சங்கத்தாருக்காவது, தாங்கள் இந்த நாட்டில் சாதித்த நன்மைகளைக் கூற 'டல்ஹௌஸி' கிடைத்தார்—கண்ணுக்கு எதிரில் இரயில் ஓடிக்கொண்டிருக்கிறது.

இந்தப் பிரம்ம சமாஜி, இங்கே, தம்மவர் சாதித்ததைக் காட்ட,எவர் பெயரைக் கூறமுடியும் — எதைத் தான் உதாரணத்துக்கு அழைக்க முடியும்.

இதனை உணராமல் 'ஹாஸ்யம்' என நினைத்து, ஏதேதோ, பேசுகிறார். நாட்டைப் பரிபாலனம்செய்யும்பொறுப்பிலிருக்கிறாரேயொழிய —அதன் தன்மையை அறியும் குணுதிசயம் கொஞ்சங்கூட இல்லை, இவரிடம்!

அதனை உணர்ந்திருந்தால், திருவாரூரில் தனக்குக் கருப்புக்கொடி பிடித்த கழகத் தோழர்களிடம் பாய்ந்து — அவர்களுடன் மல்யுத்தத்துக்குச் செல்லும் 'கிங்காங்'

போல நின்று—தோழர்களின் கையிலிருந்த கொடிக் கம்புகளைப் பிடுங்கி—தோழர்களை அடித்து, அதன் பலனுக்க் கீழே விழ, அடியிலே கிடந்த மழைச்சேறு உடம்பெல்லாம் நிறைய—இந்த அவமானம் தாங்கமாட்டாது, 'சுடு! சுடு!!' என்று கூவ—ஜில்லா அதிகாரிகள் தலையிட்டு கவர்னரைச் சாந்தப்படுத்த—இவ்வளவு வெட்கக்கேடான காட்சிகளா, நடைபெற்றிருக்கும்?

கவர்னர் என்பதையும் மறந்து, கலாட்டா செய்திருக்கிறார், ஆரூரில்! இந்த நாட்டுக்குரியோரை, இவர் அடித்திருக்கிறார்! தன்கையாலேயே கம்பை எடுத்துச் சென்று பாய்ந்து வீசியிருக்கிறார்.

இவ்வளவு பரிபக்குவம் பெற்றவர், நம்ப கவர்னர்! ஆரூரில் அடிதடி—ஆனால், நாகையிலோ, 'திராவிட இயக்கம், பெரிய கட்சிதான்; அது, திராவிட நாடு கேட்டால், அரசியல் வரையறைக்குட்பட்டுப் பெறலாம்', எனும் புத்தி போதனை.

இந்தளவுக்கு விசித்திரமான உருவில், பவனி வரும், இந்தப் 'பபூனை' எங்கே, காண முடியும்? கலிட்டோனியர்கள், அன்னியர்கள் — அவர்களுக்குத் தமது தேசத்திடம் பற்றிருக்கிறது—ஆகவே, இவர்கள் வெளியேறவேண்டும்—என்று கூறிய இவருக்கு மட்டும், இவருடைய வடநாட்டின் மீது, ஆசையில்லாமலா இருக்கிறது? இவர் மட்டும், ஏன் வெளியேறாமலிருக்கிறார்!

முன்பெல்லாம் நாடகம் ஆரம்பிக்குமுன், 'பபூன்' வருவது வழக்கம்—அவனை விதூஷகன் என்பார்கள்—அவனே, நாடகத்தின் முதல் நபர் என்று கருதப்படுவான். ஆனால், இப்போது, 'பபூன்'களில்லாமலே நாடகங்கள் நடைபெறுகின்றன.

ஆனால், அரசியல் அரங்கத்தில் மட்டும், அரசியல் அதிகாரம் எதுவுமில்லாத, இந்த 'பபூன்'கள் ஏனிருக்க வேண்டும்—எதையாவது பேச வேண்டும் எனும் கருத்தில், அந்நிய மதக்காரர்கள்மீது அகம்பாவத்தை அள்ளி வீசுவதும், அர்த்தமில்லாமல் நடந்து கொள்வதுமாக யிருந்து, நமக்கெல்லாம் அவமானத்தை அள்ளிக் கொட்ட வேண்டும்?

★ ஜனநாயகமாம்! ★

அயல் நாடுகளில் இந்தியா ஒரு 'சனநாயகக் கோட்டை' எனப் பேசப்படுகிறதாம். அங்ஙனமிருந்தால் எல்லோருக்கும் பெருமைதான். இங்கு நடைபெறும் சனநாயக நிகழ்ச்சிகளைப் பற்றிச் சந்தி சிரிக்காமலிருந்தால் போதும் என வரம் கேட்கவேண்டியிருக்கிறது. கேள்வி உருவத்தில் சில குறிப்புகளைத் தருகிறோம்.

1. பெப்சு மாகாணத்தில் 256 பிரிவுப்படி நடைபெற்றுவரும் ஆட்சி சனநாயக ஆட்சிதானா?

2 திருவாங்கூர்—கொச்சி சர்க்காரை ஆதரித்து 51 வாக்குகளும், எதிர்த்து 56 வாக்குகளும் ஏற்பட்டன. ஆண்டால் காங்கிரசு, இன்றேல் சனாதிபதிதான் ஆளவேண்டும் எனச் சொல்லிக்கொண்டிருப்பதும் ஒரு சனநாயகம் தானா?

3 மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத ஒரு மந்திரியார் 6-கோடி மக்களின் உயிர்ப்பிரச்னையான கல்வித் திட்டத்தை யாரையும் கலந்து கொள்ளாது தனது எண்ணப்படி சுயநல நோக்குடன் மாற்றியமைத்துக்கொள்வதும் ஒரு சனநாயகம் தானா?

4. திட்டத்தை நிறுத்திவைக்கு மாறு சபையிற் பெரும்பான்மையோரால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை மதியாது அமுல் நடத்திக்கொண்டிருப்பதும் ஒரு சனநாயகம் தானா?

5. நம்பிக்கைத் தீர்மானமானால் ராஜினமா செய்யவேண்டும். கல்விப் பிரச்னையானல் திட்டத்தை ஒத்தி வைக்கவேண்டும். இரண்டுமின்றிக் காலம் கடத்துவதும் ஒரு சனநாயகம் தானா?

6. "சட்டசபையால் தோற்கடிக்கப்பட்ட மந்திரி சபை உடனே ராஜினமா செய்யவேண்டும்" என்பதை அரசியல் சட்டம் 164 பிரிவு 2ஐப் பாரென்றால் எழுத்து மூலமில்லாத இங்கிலாந்து முறைகளை இழுத்துக் காட்டுவதும், முன்பு சொல்லாது—தோல்விக்குப் பின்பு, இது ஒரு சிபாரிசு எனச் சட்ட நுணுக்கம் தேடுவதும் ஒரு சனநாயகம் தானா?

7. மெம்பர்கள் எதிர்த்ததற்காக சில்லா போர்டு தலைமையை வீசியெறிந்து வெளியேறினர், பி. டீ. சௌந்திரபாண்டியனார். கட்சி புறப்பினர்கள் 80 பேர் வேண்டாமென மேலிடத்துக்கு மகஜர் அனுப்பும்வரை, தானும் மேலிடத்தாதரவு தேடிக்கொண்டே பதவியில் ஒட்டிக்கொண்டிருப்பதும் ஒரு சனநாயகமா?

8. பொதுமக்களால் தோற்கடிக்கப்பட்டவர்களை மீண்டும் கவர்னராகவும் மந்திரிகளாகவும் மாற்று வழிகளில் நுழைத்துப் பொதுமக்கட்கெதிர்ப்பு முறையில் வைத்துக் கொண்டிருப்பதும், ஒரு சனநாயகமா?

9. சட்ட மன்றில் முக்கிய பிரச்சனைகளுக்கு வழி காணுவிடில், வெளியில் எதிர்ப்புச் சக்தியைத் திரட்டுவதுமுண்டு. புகைவண்டியை நிறுத்துவது குற்றமென்றால், யார் நிறுத்தினாலும் குற்றமேதான். தமிழரசுக் கழகத்தாரும், தி. மு. கழகத்தாரும் இவ்வேலையைச் செய்தார்கள். கருத்து வேறுபாடுள்ளவர்களைமட்டும் சுட்டுத் தள்ளுவது ஒரு சனநாயகமா?

10. மாணிக்கவேலர்— டி. பிரகாசம் இவர்கள் போன்ற இன்னும் சில பெரிய மனிதர்கள் மக்களிடம் வாக்கு வாங்குவது ஒரு கட்சியின் பெயரால். அவர்கட்கு மந்திரிப் பதவியும் சில சலுகைகளும் காட்டிக் கட்சிக்கிழுப்பதும், அவர்களும் தேர்ந்தெடுத்த மக்களைக் காட்டிக் கொடுத்து நகத்தை முறித்துக் கொண்டு வருவதும் இத்தகைய நிகழ்ச்சி (அரசியற் பிளாக் மார்க்கெட்)கள் ஆட்சியரங்கில் நடந்து கொண்டிருக்கிறதே இதுவும் ஒரு சனநாயகமா?

இவ்வாறு எழுதிக்கொண்டே போகலாம். ஷேக்ஸ்பியர் நாடகக் கோமாளி சொல்வதுபோல், சனநாயகம் ஏட்டிலுள்ள ஒரு வாக்கியமன்றி நாட்டில் யாண்டும் காணமுடியாததொன்றாகும்.

[உழவன்]

நிக்ஸன் வாய்மொழி!

[ப. வாணன்]

"எங்கே உன் பையைக் காண்பி!"

"எனக்கு இன்று குறியே வரவில்லையப்பா! கிடைத்ததெல்லாம் இந்த இரண்டு புறாக்கள் தான்."

"அட அசடே! இதோ பார். பத்து மணிப்புறாக்கள். இருபது காடை. முப்பது கௌதாரி!"

*

பொழுது போக்காக வேட்டையாடச் செல்லும் சீமான்கள் வீட்டுக்குத் திரும்பும்போது இம்மாதிரி தங்களுடைய குறிபார்த்துச் சுடும் தன்மையைப்பற்றி விவாதிப்பது வழக்கம். தனிப்பட்ட மனிதர்கள் காடையையும் கௌதாரியையும் மணிப்புறாவையும் சுட்டுக்கொல்வதில் யாருக்கும் கோபமில்லை. பாவம், அதுதானே அவர்களுக்குப் பொழுதுபோக்கு!

ஆனால் இதே பாணியில் மனிதர்களே மனிதர்களைச் சுட்டுக்கொல்கிறார்கள் என்றால், அதைப்பற்றி என்ன நினைப்பது?

பிரிட்டிஷாரின் ஆப்ரிக்க காலனி நாடான கென்யாவில் இன்று இந்த விதமான மனிதவேட்டை நடைபெறுகிறது.

"இன்றைக்கு எவ்வளவு கறுப்பு மனிதர்களைக் கொன்றோம்!" என்று கணக்குப் பார்த்து தங்களுக்குள் யார் வீராதி வீரன் என்று அவனுக்குப் பட்டம் கொடுப்பதுதான், வெள்ளை அரசாங்கத்தின் ராணுவப் படைகளின் மாலைநேர வேலையாம்.

ஓயாது வேலைசெய்து அலுத்துப் போனவன், ஓய்வு நேரத்திலே வேட்டையாடிவந்து தான் சுட்டுக் கொன்ற மணிப்புறாக்களின் பெருமையை மாற்றாரிடம் கூறுவது போல, "இன்று கென்யாவின் காட்டிற்குள் போனேன்; கறுப்பர் கூட்டம் ஒன்றைக்கண்டேன்; அங்கிருந்த அறுவரையும் சுட்டு வீழ்த்தினேன்" என்று கூறுகிறானாம், ஒவ்வொரு வெள்ளைக்கார படைவரிசையைச் சேர்ந்தவனும் ஒரு வெள்ளை தளபதி உத்திரவிட்டானாம்; "அவன் கறுப்பனாயிருந்தால் சுட்டுவிட வேண்டியதுதான்!" என்று. கட்டளை பிறப்பித்தது மாத்திரமல்ல, சுட்டே காண்பித்தானாம்.

இந்த அநீதியை கோர்ட்டிற்கு எடுத்துச் சென்றனர். அறியாமையில் வாடி, அடிமையாய் வாழும் கென்யாவாழ் குடிமகனுக்கு போதிய சாட்சி எங்கே கிடைக்கும்? ஆகவே போதிய சாட்சியமில்லையென்று அந்தத் தளபதி விடுவிக்கப்பட்டானாம், சென்ற வாரம்! வெள்ளை ராணுவ வெறியர்கள் நடத்தும் அநீதிகள் இதுமாத்திரமென்று முடிவு செய்துவிடாதீர்கள்.

இதைவிட நெஞ்சு திடுக்கிடும்படியான செய்தி வந்திருக்கிறது, சென்ற வாரம்.

கென்யா நாட்டிலே சுதந்திரப் போராட்டம் நடத்தும் மௌ—மௌ இயக்கத்தினர் தங்கியிருக்கும் இடங்களைத்தாக்கி இருக்கின்றனர், வெள்ளை ராணுவத்தினர். துப்பாக்கிமுனை போதாதென்று ஏரோப்ளேனில்வந்து குண்டுமாரியைப் பொழிந்து! அதிலேயும் கௌரவமான முறையில்தான் இந்தக் காரியம் செய்யப்படுமாம்.

மௌ-மௌ இயக்கத்தினர் நிச்சயமாக இருக்குமிடம் அறிந்து, பின்புதான் அங்கே குண்டு போடப்படுமாம்!

நாட்டு விடுதலைப் போராட்டம் நடத்துபவர்களை நசுக்க, எவ்வளவு குரூரமான திட்டங்களை, பிரிட்டிஷ் வல்லரசு, சர்ச்சிலின் தலைமையில் தயாரிக்கிறது என்பதைப் பார்க்கும் போது, இந்த மாறுபட்ட உலகத்தில், ஏகாதிபத்தியவாதிகள் இன்னும் எவ்வளவு வெறியோடு வாழ்கின்றனர் என்பது நன்கு தெரியும். கென்யாவில் நடக்கும் அட்டூழியங்களைப்பற்றி பிரிட்டிஷ் பார்லிமெண்டில் தொழிற்கட்சி உறுப்பினர் ஒருவர் கேள்வி கேட்டபோது, காலனி மந்திரி சரியான பதில் எதுவும் கூறாமல், கென்யா கவர்னரின் ரிப்போர்ட் தனக்குக் கிடைக்கவில்லை என்று கூறியிருக்கிறார். உலக மேடையிலே மிகக் கேவலமான பேச்சுக்கு இடங்கொடுக்கலாகாது என்று அவர் மறுப்பியிருக்கிறாரே தவிர, கென்யாவில் சுதந்திரப் போராட்டம் நடத்துபவர்களுக்கு வாழும் உரிமையைக்கூட, காலனி மந்திரி அளிக்கத் தயாராயில்லை என்பது அவர் மறுப்பலிலிருந்து தெரிகிறது.

ஹிட்லரின் கொடுங்கோன்மையை எதிர்த்தபோது கூட, ஜெர்மன் நாட்டு மக்களுக்குத் தங்கள் வருத்தத்தைத் தெரிவித்துவிட்டு குண்டு வீசிய இங்கிலாந்து பிரிட்டன், கென்யாவில் அந்த நாட்டு மக்கள் விடுதலைக்காக உழைத்தால் சுட்டுத்தள்ளவும், குண்டுவீசி ஒழிக்கவும் முன்வந்தால், மேலை நாடுகள் பேசும் ஜனநாயகத்தின் மணம் எங்கே என்று நம் தெரிந்து கொள்ள முடியாதவர்களாயிருக்கிறோம்.

இன்றைக்கு அடிமைப்பட்ட ஆசிய, ஆப்ரிக்க நாடுகளில் நடக்கும் சுதந்திரப் போராட்டத்தையும் அதை நசுக்கும் வெள்ளை ஏகாதிபத்தியத்தின் நிலைமையையும் அறிய சில உண்மைகளை நம் கவனத்திற்குக் கொண்டுவரவேண்டும்.

சென்ற உலக யுத்தத்தில் ஏற்பட்ட காரணத்தால், மிக நலிந்து போனது பிரிட்டிஷ் சாம்ராஜ்யம்.

ஐரோப்பாவிற்கே தொழிற்சாலையாக விளங்கிய பிரிட்டிஷ்தீவு, யுத்தத்தின் முடிவில் கடன்பட்ட நாடாகி, அமெரிக்காவின் தயவின்றி வாழ முடியாது என்ற நிலையில் வெளிவந்தது.

அப்படிப்பட்ட நிலையில் உலகம் பூராவும் காலனி நாடுகளைக் கட்டியாளுவது முடியாத காரியம்

அதோடு போர் நடந்த காலத்தில் சுதந்திரத்தின் பெருமையைப் பேசி காலனி நாடுகளின் முழு உதவியையும் பெற்று போரில் வெற்றி கண்டது பிரிட்டன். ஆகவே முடிவில் பல்வேறு காலனி நாடுகளில் வளர்ந்து வந்த தேசிய தாகத்தை தடைசெய்ய முடியாதவாறு நிலைமை வளர்ந்தது.

காலனி நாடுகளை அடிமை நாடுகளாக வைத்துக் கொண்டிருக்க முடியாதென்றால், அப்படி அடிமை நாடுகளை அடக்கியாளும் ராணுவத்திறம் இல்லையென்றால், என்ன செய்வது? அதற்கு அடுத்த லாபகரமான வழியென்ன?

இதைத்தான் தீர்க்கயோசனை கொண்ட தொழிற்கட்சி செய்தது.

இந்தியா, பர்மா, சிலோன், பாகிஸ்தான் முதலிய நாடுகளில், தங்களுக்கு லாபகரமான முறையில் அரசியல் சுதந்திரத்தை அளித்தது. இந்த நாடுகளில் பல ஆண்டுகளாக வளர்ந்து வந்த சுதந்திர இயக்கங்கள் இருந்தன. அதோடு அந்த இயக்கங்கள், பழமையான கொள்கைகளையும், முதலாளித்துவத்தை பாதிக்காத திட்டங்களையும் கொண்டிருந்த தலைவர்கள் கிடைத்தனர். ஆகவே அவர்கள் கையில் கொடுக்கும் அதிகாரம் தங்களுக்கு அதிகமான நஷ்டத்தைக் கொடுக்காது என்று உணர்ந்தனர், தொழிற்கட்சி அரசாங்கத்தினர். அதோடு வளர்ந்துவந்த புரட்சி இயக்கங்களை நசுக்கவும் இதுதான் சரியானவழியாகவும் இருந்தது. அந்தந்த நாட்டு முதலாளிகளையும், பழமைவிரும்பிகளையும், அந்தந்த நாட்டு புரட்சிவாதிகளோடு மோதவிடுவதுதானே ராஜ தந்திரம். இதை வெகு சுலபமாகக் கையாண்டது அட்லி சர்க்கார்.

அவர்கள் போட்ட கணக்கு சரியானது என்பதைப் பின்னால் நடந்த சம்பவங்கள் நிரூபித்து விட்டன. இன்றைக்கு பாக், இந்தியா, பர்மா, சிலோன் இவைகளுக்கு சுதந்திரம் கொடுத்ததால் பிரிட்டன் லாபமே அடைந்திருக்கிறது. வழக்கப்படி வியாபாரம் தொடர்ந்து நடைபெறுகிறது. என்றும்போல் தொடர்ந்து மூலப் பொருள்கள் பிரிட்டனுக்குக் கிடைத்து வருகிறது. பெரும் அளவுக்கு அகில உலக ரீதியிலும் பிரிட்டனின் துணைக்கு இந்த நான்கு நாடுகளும் சென்றுவிடுகின்றன. அரசியல் அதிகாரம் வெள்ளையன் கையிலிருந்து கறுப்பன் கையில் மாறியது தவிர வேறு எந்தவிதமான மாறுதலும் பிரிட்டனை பாதிக்குமளவு நடைபெறவில்லை. அதுகூட பிரிட்டிஷ் ராணியை தலைவியாக பர்மா நீங்கலாக மற்ற நாடுகள் ஏற்றுக் கொண்டுள்ளன. இப்படி லாபக்கணக்கில் தாராளமாக அள்ளி வழங்கிய பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் மற்ற காலனி நாடுகளில் வேறு சூழ்நிலையை சமாளிக்க வேண்டியதாயிற்று.

மலேயா, கயானா மற்றும் ஆப்ரிக்க காலனிகள் முதலிய இடங்களில், இந்தியா, பாகிஸ்தான் முதலியவைகளில் செய்ததைப்போல் அவர்களால் செய்யமுடியாதநிலை ஏற்பட்டது. இந்த காலனி நாடுகள் பொதுவாக மிக பிற்போக்கான நிலையில் இருந்தன. அறியாமை மாத்திரமல்ல; கறுப்பர்கள், ஆகவே நாம் தாழ்ந்தவர்கள் என்று தாழ்வு மனப்பான்மையும், பழங்கால சமூக நிலையும் மேலோங்கி இருந்தன. இரண்டாவது உலக யுத்தம், இந்த நிலைக்கு பேரிடியைத் தந்து சென்றது. மலேயாவிலும், ஆப்ரிக்காவின் சில பகுதிகளிலும், போர்க் காலத்தில் எதிரிகளின் கையில் சிக்கியது. புதிதாக பிடித்த நாட்டிலே, மக்களை தங்கள் பக்கம் இழுத்துக்கொள்ள அதிகமான சம உரிமையை வழங்கினர், ஜப்பானியரும் ஜெர்மானியரும். "இவர்களைப் போரிட்டு வெளியே துரத்தி, உங்கள் நாட்டை உங்களுக்கே தருகிறோம்!" என்று உபதேசம் புரிந்து போராயுதங்களைக் கொடுத்து கொரில்லாப்படைகளை தயார் செய்தனர், பிரிட்டிஷார். ஆகவே, போர் முடியும் தருணத்தில் கையில் போராயுதங்களை வைத்துக்கொண்டு சுதந்திரம் கேட்டனர் இந்த நாட்டு விடுதலை வீரர்கள். கொள்கையிலே நேர்மையிருந்திருந்தால், ஜப்பானியரை தோற்கடித்தவுடன் மலேயாவைவிட்டு சென்றிருக்கவேண்டும், பிரிட்டிஷார். ஆப்ரிக்க காலனிகளுக்கு சுதந்திரம் கொடுத்திருக்க வேண்டும்.

ஆனால் பிரிட்டனுக்கு இருந்த பொருளாதார நிலையும், ஏகாதிபத்திய எண்ணமும் அவர்களை அந்த விதம் செய்ய அனுமதிக்கவில்லை.

மலேயாவிலும், ஆப்ரிக்க காலனி நாடுகளிலும் இந்திய உபகண்டத்தில் இருந்தது போல் மிதவாத அரசியல் வாதிகளைக் காணமுடியவில்லை. ஆகவே பிரிட்டன் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும், பயங்கர புரட்சி இயக்கத்தினரிடம் தான் அரசியல் அதிகாரத்தை ஒப்படைத்துப் போக வேண்டும். புரட்சி இயக்கத்தினரோ அந்தந்த நாட்டிலே மிகத் தீவிரமான சமூக, பொருளாதார சீர்திருத்தங்களை செய்து, தேசிய வளர்ச்சியில் அக்கறைக் கொண்டவர்கள். அதோடு ஏகாதிபத்தியங்களை ஒழிக்க சூள் கொண்டவர்கள். அப்படிப் பட்டவர்களிடம் அதிகாரம் கொடுக்கப்பட்டால் பிரிட்டனின் ஆலைகள் மூடப்பட வேண்டிய நிலை ஏற்படும். அவைகளுக்குத் தேவையான மூலப் பொருள்கள், ரப்பர், டின், மாங்கனீஸ், பித்தளை, மரம், மரக்குழம்பு இரும்பு, இப்படி எல்லாவிதமான மூலப் பொருள்களும் இந்த காலனி நாடுகள்தான் பிரிட்டிஷ் தொழிற்சாலைகளுக்குக் கொடுத்து வந்தன. அவைகளை இழந்து உலகத்தில் உலவ முடியாத நிலை பிரிட்டனுக்கு. இந்தப் பயங்கரமான உண்மையை உணர்ந்து கொண்டுதான், பயங்கரப் புரட்சிவாதிகளை மீறிக் கொண்டு யாராவது பழமை விரும்பிகள் வருகின்றனரா என்று பார்த்துக் கொண்டிருந்தனர்.

இதற்குள் சர்வதேசிய அரங்கத்தில் பெரும் மாறுதல் ஏற்பட்டது. பாசீசத்தைத் தோற்கடித்த ரஷ்யா, "உலகம் பூராவும் கம்யூனிஸம்" என்ற தனது கொள்கையை நடைமுறையில் நினைவாக்கும் வேலையில் ஈடுபட்டது. கிழக்கு ஐரோப்பாவில் சண்டை முடிந்தவுடனே கம்யூனிஸ்டு நாடுகள் மலர்ந்து விட்டன. அந்தப் பலத்தை வைத்துக் கொண்டு சைனாவில் கம்யூனிச அரசாங்கம் ஏற்படுத்த ஆவன செய்ய ஆரம்பித்தது. உலகம் பூராவும் இருக்கும் காலனி நாடுகளில் சுதந்திரத்திற்குப் போராடும் மக்களுக்கு தன் அனுதாபத்தைத் தெரிவித்தது.

பல நாடுகளில் கம்யூனிஸ்டுகள் சார்பில் நடந்த சுதந்திரப் போராட்டங்களுக்கு வெளிப்படையாகவே பரிந்து பேசியது.

இப்படி தன்னாலான உதவிகளை

செய்து காலனி நாடுகளின் முழு அன்பையும் பெற்றுவரும் ரஷ்யாவைக் காண, அமெரிக்கா திகிலடைந்தது.

முதலாளித்துவ அடிப்படையில் வளர்ந்த அமெரிக்கா கம்யூனிஸ்டுக் கொள்கையை ஒழிக்கவும், உலக அரங்கத்தில் உச்சத்தில் நிற்கவும் தனது பக்கம் நாடுகளை சேர்க்க ஆரம்பித்தது. அமெரிக்க டாலரில், தாழ்ந்துபோன தனது பொருளாதாரத்தை சரிசெய்து கொண்டிருந்த பிரிட்டனுக்கு இரண்டு வழிகளிலும் இது சௌகரியமாயிற்று.

அமெரிக்காவின் பணம் கிடைப்பதோடில்லாமல், காலனி நாடுகளை கட்டியாளவும் அமெரிக்க உதவி கிடைத்தது

உலகம் ரஷ்யாவின் தலைமையிலும் அமெரிக்காவின் தலைமையிலும் பிரிந்த நாள் முதற்கொண்டு, பிரிட்டன் தன் காலனி நாடுகளுக்கு சுதந்திரம் கொடுக்கும் திட்டத்தைக் கைவிட்டது என்று தான் கூற வேண்டும். எந்த காலனியில் சுதந்திரப் போர் ஆரம்பித்தாலும், அதை கம்யூனிஸ்டுகளின் சதித் திட்டம் என்று கூறி, அடக்க போர்ப் படைகளை அனுப்ப ஆரம்பித்தது.

இந்தத் திட்டங்களின் விளைவுதான் மலேயாவில் டெம்ப்ளர் ஆயிரக்கணக்கான உரிமை வீரர்களைச் சுட்டுக் கொன்றது—கொல்வது.

இப்படி, உலகப் போக்கில் தனக்குச் சௌகரியமான நிலையை உண்டாக்கிக் கொண்ட காரணத்தால்தான் கென்யாவில் குண்டு போட்டு அந்நாட்டு மக்களை சாகடித்து விட்டு, தான் ஜனநாயகவாதி என்று கூறுகிறான் ஆங்கிலேயன்.

ரஷ்யாவின் பயத்தைக் காட்டியே கயானாவில், நயஸாலாண்டில், உகாந்தாவில், ரொடிஷியாவில், தென் ஆப்ரிக்காவில் இன்னும் இப்படிப்பட்ட பல காலனி நாடுகளிலும் ஆதிக்கம் செலுத்துகிறான் வெள்ளையன்—அதுவும் மிகக் கொடுங்கோன்மையான ஆட்சி முறையைக் கொண்டு.

இந்த நிலைமையை வளரவிட்ட அமெரிக்காவிற்கு ஜனநாயகத்தில் எந்தளவு பக்தி என்பது புரிந்து கொள்ள முடியாத புதிர்.

சென்ற வாரம் சென்னை வந்து போன அமெரிக்க உபஜனாதிபதி ரிச்சர்ட், நிக்ஸன், "அமெரிக்கா, காலனி நாடுகள் இருப்பதை ஒத்துக் கொள்ளாது. உலகத்தில் எல்லா நாடுகளும் அவரவர்கள் விருப்பப்படி வாழ்வதையே நாங்கள் வரவேற்கிறோம்!" என்று பேசியிருக்கிறார்.

ஆச்சாரியாரிடம் அவர் கண்ட அறிவில் மயங்கி அந்தமயக்கத்தில இந்த வார்த்தைகளை அள்ளி வீசினாரோ, என்னவோ நமக்குத் தெரியாது.

ஆனால் ஒன்று மாத்திரம் நமக்குத் தெரிகிறது.

கயானாவில் ஜாகன் அரசாங்கத்தை கலைத்து, மூவாயிரம் பிரிட்டிஷார், எண்பதாயிரம் கயானா மக்களை அடக்கியாளத் துணிந்து, ஜனநாயகத்தைக் குழி தோண்டிப் புதைத்து மூடப்பட்ட மண்ணில் ஈரங்கூட இன்னும் போகவில்லை. ஆனால் இந்த ஆதிக்கச் செயலைக் கண்டித்து ஒரு வார்த்தை கூட அமெரிக்க அரசாங்கம் கூறவில்லை.

கென்யாவில் சென்ற சிலமாதங்களில் அந்த நாட்டுக்கு உரிமையான மக்கள் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டும், தூக்கிலிடப்பட்டுமிருக்கின்றனர். அந்நாட்டு தேசியத் தலைவர் கென்யாட்டா வழக்கு மன்றத்தில் நிற்கிறார். ஆனால் இவைகளைப் பற்றி ஒருவார்த்தையாவது வாஷிங்டனிலிருந்து கேட்கவில்லை.

தென் ஆப்ரிக்காவில் மலானின் நிறவெறி அளவு கடந்து சென்று கொண்டிருக்கிறது. அந்த நாட்டுக்குச் சொந்தமான கறுப்பனை சட்டபூர்வமாக நாட்டைவிட்டே துரத்த முடிவு செய்துள்ளனர், அங்கு குடியேறிய நாதியற்றுவந்த வெள்ளையர். இந்த அக்கிரமத்தைக் கண்டித்து, அமெரிக்கா என்ன செய்ததென்று தெரியவில்லை.

இன்னும் மலேயாவில், தாய்லந்தில், இந்தோ சைனாவில் இப்படி ஏகாதிபத்திய வாதிகளுக்கும் மக்கள் விடுதலை வீரர்களுக்கும் நடக்கும் பெரும் போராட்டங்களைத் தீர்க்க அமெரிக்க என்ன செய்தது என்று நமக்குத் தெரியவில்லை.

ஆனால் நிக்ஸன் கூறுகிறார், 'காலனிநாடுகள் ஒழியவேண்டுமென்பதுதான் அமெரிக்காவின்கொள்கை' யென்று.

ஒருவேளை, ஆளுக்கும் நிலைமைக்கும் ஏற்ற விதமாகப் பேசிக் காரியத்தை சாதிக்க முயற்சிக்கும், ஆச்சாரியாரைப் பார்த்துவிட்டு பேசிய காரணத்தால், இந்த மாதிரி தங்கள் செயலுக்கு நேர்மாறான முறையில் மிக அழகாக காலனி நாடுகளைப் பற்றி பேசிவிட்டுப்போய்விட்டார், நிக்ஸன். உலகத்தில் நடக்கும் விடுதலைப் போராட்டங்களையும் அவைகளைக் கொடுங்கோன்மை ஆட்சி முறை கொண்டு நசுக்கிவரும் ஐரோப்பிய ஏகாதிபத்தியங்களையும் உணர்ந்துள்ள திராவிட மக்களுக்கு நிக்ஸனின் பசப்பு மொழிகள் சிரிப்பைத்தான் கொடுத்திருக்கும்.

அமெரிக்காவிற்கு உண்மையிலேயே ஜனநாயகத்திலும், காலனி நாடுகளை ஒழிப்பதிலும் ஆசையிருக்குமானால், ஐஸன்ஹோவர் வெளிப்படையாக பிரிட்டிஷ், டச்சு, போர்ச்சுகல், பிரஞ்சு நாடுகளின் காலனிநாட்டுக் கொள்கையை மாற்ற ஆவன செய்யவேண்டும். நடைமுறையில் அவரவர்கள் செய்வதைப் பார்த்துதான் மக்கள் கணக்குப்போடுவரே, தவிர, ஆசை வார்த்தைகளில் மயங்கிவிட மாட்டார்கள்.

நிக்ஸனுக்கும், மற்ற அமெரிக்கர்களுக்கும் அந்தளவு முன்வரதைரியமில்லாவிட்டால், பிரிட்டனிலேயே தொழிற் கட்சியின் தலைவர்களில் தீவிரவாதியான அனூரின்பிவான் சென்ற வாரம் பேசியிருப்பதைக் கவனிக்க வேண்டுகிறோம்.

பிரிட்டன் உட்பட ஏகாதிபத்திய நாடுகள் கடைபிடிக்கும் காலனிநாடுகளின் அடக்குமுறைக் கொள்கையைக் கண்டித்துவிட்டு கடைசியாக,

"இன்றைய உலகத்திலே ஒரு நாட்டின் விருப்பமின்றி, மற்றொரு நாட்டான் அந்த நாட்டிலே ஆளமுடியாது என்பதை எல்லோரும் உணர்ந்து கொள்ளவேண்டும்."

என்று கூறியிருக்கிறார்.

இதைத்தான் இன்றைய நிலையில் ஆங்கிலோ — அமெரிக்க நாடுகள் உணரவேண்டும். அப்படிக்கில்லாமல் ரஷ்யாவின் வளர்ச்சியைக்கண்டு பொறாமைப்படுவதில் அர்த்தமில்லை.

கழகக் குரல்

காஞ்சியில் 1-ந் தேதி நடைபெற்ற மாபெரும் வரவேற்புவிழாவின் போது, தி. மு. க. பொதுச் செயலாளர் பேசியபோது, குறிப்பிட்ட, கருத்துக்களில் சில:-

★

"சிறையிலிருந்து விடுதலையானவர்களை, வெளியே இருப்பவர்கள் —சிறையின் அனுபவங்களை அறியாதவர்கள் — வரவேற்பது வழக்கம்; சகஜம். ஆனால், இன்றோ! நிலைமை அப்படியல்ல. எங்களுக்கு முன்னதாக விடுதலையானவர்கள், இன்று விடுதலையாகிவரும் எமக்கு வரவேற்பு அளிக்கிறார்கள். இந்த அரிய வாய்ப்பைப் பெறுவதற்காக, நாங்கள் மனமகிழ்கிறோம். இதோ இருக்கிற தோழர் அண்ணாமலை —இங்கே வரவேற்புரை வழங்குபவர் — சில மாதங்களுக்குமுன், சென்னைச் சிறையிலே கிடந்தவர். அவரைப் போலவே, ஏராளமான கழகத் தோழர்கள், இந்த ஊரிலிருந்து, சிறைக்குச் சென்று திரும்பியிருக்கிறார்கள்— இங்கே வந்து கூடியிருக்கிறார்கள் — எங்களை வரவேற்கிறார்கள். சென்னைச் சிறையிலே நாங்கள் ஐவரும் — திருச்சியிலே கருணாநிதியுமட்டுமல்ல, நாட்டில் நாலுபக்கங்களிலும் ஐயாயிரத்துக்கு மேற்பட்ட கழகக்காளையர், சிறைக்குள்ளே கிடந்திருக்கிறார்கள்—இன்னும் கிடந்து வாடுகிறார்கள். அந்தத் தோழர்களனைவரும் தாங்கிய சங்கடங்கள், கொஞ்சநஞ்சமா? அங்களைப் பார்க்கும்போதாவது, ஓரளவு ஒதுங்கிச் செல்லக் கூடும் — அதிகாரிகளும், அதுசம்பந்தப்பட்டவர்களும்— 'என்றாவது இவர்களும்மந்திரிகளாகி விடுவார்களே!' எனும் எண்ணத்தில். ஆனால், அந்த அச்சம், நம்முடைய கழக வீரர்களிடமெல்லாம் காட்டப்பட்டிருக்குமென்று, கருத முடியும்?

எவ்வளவு தொல்லைகள் தம்மைத் துளைத்தாலும், பொருட்படுத்தாது, கொள்கைக்காகச் சிறை புகுந்த தோழர்களின் ஆர்வத்தையும் — அந்த ஆர்வத்துக்குக் காரணமான கொள்கையையும்— அந்தக் கொள்கையைத் தாங்கியிருக்கும் கழகத்தையும், ஆட்சிபுரிவோர் எண்ணிப் பார்க்க வேண்டும்

*

இராமநாதபுரம்ராஜா -இப்போது மந்திரி!—இங்கே, கூறினாராம், 'வடநாட்டுக்குச் சென்று தமிழில் இவர்கள் பெயர்களை எழுதட்டுமே!' என்பதாக. அவர் இங்கே பேசியதை ஆவலோடு, ஆச்சாரியாரிடம் எடுத்துச் சொல்வார். அதற்காகவே, இங்ஙனம், அவர் பேசியிருக்கலாம் — அல்லது வடநாட்டின்மேல் அவருக்குள்ள வெறுப்பாகவும் இருக்கலாம் — அந்த வெறுப்பைக் காட்டுவதற்கு வேறு வழியில்லாததால், 'இவர்கள் மிகவும் நேர்மையானவர்கள் — எடுத்த காரியத்தை முடிக்கும் ஆற்றல் பெற்றவர்கள் — நல்ல அமைப்பும் பலமும் உள்ளவர்கள் — நாமிருக்குமிடத்தில்தான் இவையெல்லாம் இல்லையே!' எனும் கருத்தில் நம்மைக்கொண்டு தன்னுடைய ஆசையைத் தீர்த்துக்கொள்வதற்காகவும், அவர் சொல்லியிருக்கலாம். அவர், எதற்காக அவ்விதம் சொல்லியிருந்தாலும் சரி, அவருக்கும் அவரைச் சார்ந்தோருக்கும் சொல்லிக் கொள்வேன் —நிச்சயம், நாங்கள் வடநாட்டில் தமிழால் எழுதத்தான் போகிறோம் ராமநாதபுரம் ராஜா, எதிர்பார்ப்பதுபோல, ரயில் போர்டிலே அல்ல! திராவிட நாட்டுக் குடியரசு சாசனம் எழுதும்போது ஒருபக்கம் நேருவும், மற்றோர் பக்கம் நாங்களும், ஒப்பந்தக் கையெழுத்துக்கள் போடும்போது, அங்கே தமிழில் தான் எழுதப் போகிறோம்!!

*

சிறைக்கூடம், சிறந்த உலைக்கூடம் போன்றது. உலைக்கூடத்தில் பழுக்கக்காய்ச்சி இரும்பை எடுத்து அடித்துத்தான், வேலும் வாளும் செய்வார்கள். அதேபோல, சிறைக்கூடத்தில், தியாகத் தழும்பேறியவர்கள்தான் நாட்டையாளவும் செய்வார்கள். இதனை, இன்று அடக்குமுறைகளை அவிழ்த்துவிடுவோருக்கு நான் சொல்லிக்கொள்வேன். இங்கே, எங்கள்மீது! இதே நேரத்தில் சோஷியலிஸ்டு கட்சி அசோக்மேதா சிறையில்! கம்யூனிஸ்டு கட்சி பாலதண்டாயுதம் சிறையில்!—இவ்விதம் முற்போக்குக் கட்சிகளையெல்லாம், சிறைக்கு அனுப்புவதென்றால், அந்தக் கட்சிகளைச் சேர்ந்தோர் திரும்பும்போது நாட்டை ஆள்பவர்களாகத்தான் திரும்புவார்கள். இதனை, நான், எடுத்துக்கூற விரும்புகிறேன், ஆச்சாரியாருக்கு.

*

ஆச்சாரியாருக்குத் தெரியும், எதிர்காலம் நம்மிடம் ஒப்படைக்கப்படும் என்பது. திராவிட நாடு பெற்று விடுவோம்—இதனை, அவர், நன்றாக உணருகிறார். எனவேதான், அந்தப் பொறுப்பை ஏற்க, நம்மைத் தயார் செய்கிறார். அவருக்கு ஒன்றைக் கவனமூட்ட விரும்புகிறேன். கடந்த உலகப் பெரும் போரின்போது ஹிட்லரின் படைகள், லண்டன் மாநகரின்மீது குண்டுகளைப் பொழிந்தன—விமானங்களிலிருந்தபடி அள்ளி அள்ளிச் சொரிந்தன. அப்போது சர்ச்சில் சொன்னார், Londan Can take it என்று. இலண்டன் இதனைத் தாங்கிக் கொள்ளும், என்றார், சர்ச்சில்! அதனையே ஆச்சாரியாருக்குத் திருப்பிக்கூற விரும்புகிறேன்—எது நேர்ந்தாலும் சரி, திராவிட முன்னேற்றக் கழகம், தாங்கிக் கொள்ளும்!!

*

சர்ச்சில் அளவுக்கு நான் பெரிய மனிதன்—எனும் கர்வத்தில், நான் இவ்விதம் கூறவில்லை. அவர், மிகப் பெரியவர். நானோ மிகச் சாமான்யன். ஆனால், அவருக்கு, அந்த நாட்டு மக்கள் மன்றத்தில் எவ்வளவு அன்பு உண்டோ, அதைவிடப் பன்மடங்கு அதிகமான அன்பை இந்நாட்டு மக்களிடம் நான் பெற்றிருக்கிறேன், பெறற்கரியபேறு! மற்ற அரசியல் கட்சிகளிலிருப்போர் தங்கள் தலைவர்களை 'ஸ்ரீஜத்' 'ஸ்ரீமான்' 'கனம்' மகான்' இவ்விதம்தான் அழைப்பர். ஆனால், இந்நாட்டு மக்களின் தொண்டனாகிய என்னை எல்லோரும், 'அண்ணா' என்று அழைக்கிறார்கள். இந்தளவுக்கு எல்லோராலும், 'அண்ணா'வென அழைக்கப்படும் அன்பை, நான் பெற்றிருக்கிறேன். இந்தக் குடும்பப்பாசம்—அண்ணன் தம்பி உறவு—எங்கக் கட்சியிலிருக்கிறது?

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press,
5, Tirukkachinambi St., Kancheepuram.